# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 5 ஏப்ரல் 2024



## சித்திரை சிறப்பிதழ்

# ஸ்ரீ விசாலம் சிட் :பண்ட் லிமிடெட்

**நம்பிக்கை, நாணயம், நேர்மை, நிலையான தன்மையுடன் மக்கள் சேவையில்**

## "தலைமுறைகளை கடந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள உங்களுடன்"

ஒன்றாக நாம் வளர்வோம்

**ரூ.1,00,000/-**
முதல்
**ரூ.1,00,00,000/-**

வரையிலான மதிப்புள்ள சீட்டுகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்



77th ANNIVERSARY

எங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...


SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI


பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

WWW.SREEVISALAM.COM  +91 86670 03356




GET IT ON Google Play

# வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக

நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...

இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்

உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

மலர் : 3 இதழ் : 5 ஏப்ரல் 2024

இலவச வெளியீடு

**பதிப்பாசியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**ஆலோசகர்**

இளமுகில். நாராயணன்

தேவகோட்டை

---

**இதழ் வடிவமைப்பு**

ப. சுந்தரமகாலிங்கம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.


---


**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534


---


கட்டுரைகள் மற்றும் இதர

படைப்புகளுக்கு

படைப்பாளர்களே பொறுப்பு.

விளம்பரங்கள் விளம்பரதாரரின்

பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பார்ந்த வாசகர்களுக்கு !

இனிய வணக்கம் !

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நம் மின்னிதழின் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி .

வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக கடந்த மாதம் மின்னிதழின் **MOBILE APP** திரு. உமாபதி அருணாசலம் ( இயக்குனர் – ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் லிமிடெட் – பள்ளத்தூர் ) அவர்களால் வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பயன்பாட்டில் உள்ளது .

நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

இன்னும் சில தினங்களில் சித்திரை முதல் நாள் ..புது வருடம் ..!!!

பசுமை சூழ் இயற்கையுடன் , பூக்கள் பூத்துக் குலுங்க , குயிலின் இனிய கானத்துடன் சித்திரை வருடப்பிறப்பைக் கொண்டாடத் தயாராக இருக்கும் இந்த வேளையில் எல்லோரும் சித்திரைப் பெண்ணை வரவேற்க மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பீர்கள் . இந்த நல்ல தருணத்தில் , நல்ல விடயங்களை முன்னெடுத்து நடைமுறைப்படுத்த உறுதி பூணுவோம் .

நாம் வாழ்க்கையில் உயர்வு பெற வேண்டுமெனில் கடின உழைப்பு அவசியம் . ஆகவே , நம் உயர்வுக்கான நேர்மையான பாதையைத் தெரிவு செய்து வெற்றிப்பாதையை நோக்கி முன்னேறுவோம். புதிய திட்டங்கள் ,புதிய முயற்சிகள் என தன்னம்பிக்கையுடன் பயணித்து, நம் இலக்கை அடைய பிரயத்தனம் செய்வோம் .

அடுத்தவர்களுக்கு இடையூறு விளைவிக்காத விதமாக நமது பயணம் அமைய வேண்டும் . நம்மால் முடியுமானவரை நல்ல

எண்ணங்களை மனதில் நிரப்பி , நம் செயற்பாடுகளையும் நல்முறையில் சீரமைத்து தெளிவான சிந்தனையுடன் பயணிக்க ஆரம்பிப்போமானால், எப்போதும் மன நிறைவும் ,மகிழ்ச்சியும் நம்மை சூழ்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை .

சித்திரைச் சிறப்பிதழாக மலரும் இம்மாத இதழை தங்கள் அனைவரது வாசிப்பை கவரும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல ஆக்கங்களுடன் வெளியிடுகின்றோம்.

சித்திரையில் பிறக்கப் போகும் ' குரோதி ' வருடம் நம் வாழ்வில் சுபீட்சத்தையும் , மகிழ்வையும் கொண்டு வந்து சிறப்பிக்க வேண்டும் என்று நாம் நகரத்தார் மின்னிதழ் சார்பாக அனைவரையும் வாழ்த்தி மகிழ்கிறோம் .


**அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் '**

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்



**இராம.சொக்கலிங்கம்**
பதிப்பாசிரியர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

PM
SWITCH TO THE FUTURE

# PALLATHUR MOTORS LLP







மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

## இந்த இதழில்...


### நமது சிந்தனைக்கு

- தலைமைக்கு எது அழகு ? ஒருங்கிணைப்பா? தனித்திறமையா?
  – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா ................ 10

### மொழி

- வாங்க பேசலாம் – பேரா கு. அன்பு மெய்யப்பன் .................................... 19

### கவிச்சோலை

- சித்திரையே வருக – கவிஞர். எம்.சோலை .......................................... 25
- வருடமகள் பிறந்து வந்தாள் – அரு. சிவகாமி இராமனாதன்...................... 36
- இறைவனே எல்லாம் – ஆர்.எம்.சண்முகம் செட்டியார் ............................ 46
- ராமன் எத்தனை ராமனடி – கவிச்சுடர் தஞ்சை பழ. வள்ளியப்பன் .......... 55

### வாழ்வியல்

- பெண் கதவு ஆண் பூட்டு – சேவு.முத்துக்குமார் ........................................ 27

### ஆன்மிகம்

- செட்டிநாடு சித்ரகுப்த நாயனார் பூசை– இராம. நா.இராமநாதன் ............... 31

### பண்பாடு

- நகரத்தார் திருமணம் – அண. சீனிவாசன் ................................................ 37

### பக்தித்தொடர்

- கர்ணனின் இடக்கை தானம் புலவர் த. கோவேந்தன் ............................ 44

### சமூகம்

- முகர்சிங் இசை கலைஞர் கலைமாமணி டாக்டர். அழகு. இராமசாமி
  அவர்களுடன் நேர்காணல். ................................................................ 47

### சமையல்

- நார்த்தங்காய் இனிப்பு பச்சடி – உமாராணி சொக்கலிங்கம் ..................... 56

### சிறுவர் பக்கம்

- மழலையர் மழைத்துளிகள் – கல்லல். மீ. மணிகண்டன் .......................... 59

### உணவே மருந்து

- ஆரோக்கியத்திற்கு அருமையான டிப்ஸ் ................................................. 60

### நிதிமேலாண்மை

- பணம் சம்பாதிக்கலாம், பங்கு சந்தையில்... – க. ஹர்ஷவர்த்தினி ஸ்ரீ ....... 64

### ஜோதிடம்

- குருப்பெயர்ச்சி 2024 பலன்கள் – ஜோதிடர். எல்லி ................................ 74

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

# தலைமைக்கு எது அழகு?


## ஒருங்கிணைப்பா? அல்லது தனித்திறமையா?



-கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும், தான் தலைவனாகத்திகழ வேண்டும் என்கின்ற ஆசை மனதுக்குள் இருக்கத்தான் செய்கிறது.பள்ளிப்பருவத்தில் இருந்தே அந்த ஆசை தொடங்கி விடுகிறது.

பள்ளி வகுப்பு ஒன்றில், அந்த வகுப்பிற்கு ஒரு தலைவனைத் தேர்வு செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்படுமானால்,அது எந்த வழிமுறையில் நடைபெறும் தெரியுமா? . நாங்கள் படிக்கின்ற காலத்தில், வகுப்பு ஆசிரியரே,ஒரு மாணவனை 'வகுப்புத் தலைவனாக' தேர்ந்தெடுத்து அமர்த்தி விடுவார். அவர் தேர்வு செய்து கொடுத்தவன்,வகுப்பில் நன்கு படிக்கின்ற மாணவனாக இருப்பான்.அவன் நல்லவனாக இருப்பானே தவிர வல்லவனாக இருப்பானா? என்பதைச்சொல்ல எவராலும் முடியாது.



உ

VALATHI
Since 2005

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி)லிட்.

இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.

## எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு

**ரூ.1,00,000/- முதல்**

**ரூ.25,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பதினேழு (17) ஆண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை.**

0431-2760064,80
3580292,7968005.

துவக்கம்
2005

94439 86143

## TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-95, மூர்த்தி ஸ்கொயர், முதல் தளம்,
5வது கி ரா ஸ் தில்லைநகர் மெயின் ரோடு,
MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி,
( ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ சத்தியமேவ ஜெயதே ★

வகுப்புத்தலைவனாக ஆசிரியரால் தேர்வு செய்யப்பட்டவனுக்கு என்ன தகுதி இருக்க வேண்டும்? என்று சிந்தித்தால்,விடை கிடைப்பது மிக எளிது.அடிப்படையில் அந்த வகுப்பைச்சார்ந்தவனாக அந்த மாணவன் திகழ வேண்டும். அவ்வளவு தானே!

ஆனால் அது மட்டுமே தகுதியில்லை .அந்த வகுப்புத் தலைவன், ஆசிரியர் வகுப்பிற்கு வருவதற்கு முன்பு, மாணவர்கள் அவர் அவர் இடத்தில் அமைதி யாக அமர்ந்திருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். சத்தம்போட்டு பேசுவதும், ஒருவருக்கு ஒருவர் விளையாடிக்கு கொண்டு இருப்பதுமாக சக மாணவர்கள் திகழும் பொழுது,அவர்களை அமைதிப்படுத்தி அமர வைக்க வேண்டும்.



வகுப்பிற்கு ஆசிரியர் வரும்வரை,அந்த வகுப்புத் தலைவன் ஆசிரியராகத் திகழ வேண்டும் என்பது தான் அங்கே தலைவனுக்குரிய தகுதியாக மாறுகிறது. சக மாணவர்களுக்குத் தேவையானவற்றை,வகுப்பு ஆசிரியரிடம் எடுத்துச்சொல்லி, அவற்றை செய்து கொடுக்க வேண்டிய ஆற்றல் மிக்கவனாகவும் அந்த வகுப்புத் தலைவன் திகழ வேண்டும்.

அதே நேரத்தில், தானே ஆசிரியர் என நினைத்துக் கொண்டு,மற்ற மாணவர்களை அடக்கி ஆளமுடியும் என்று நினைப்பது முற்றிலும் தவறாகும். அது தலைவன் என்னும் தகுதிக்கு அழகற்றதாகவும் அமைந்து விடும்.

அந்தச்சின்னஞ்சிறு வயதிலேயே 'தலைவன்' என்னும் தகுதியை தன்னுள் வளர்த்துக் கொண்ட மனிதன், தனது வாழ்க்கையைத் தொடங்கும் பொழுது, அலுவலகத்தின் தொழிற்

சங்கத்தில், தனது வீடு அமைந்துள்ள நகரின் நலச்சங்கத்தில் , பொது அமைப்புகளில், திருக்கோவில் நிர்வாகத்தில், திருப்பணிக் குழுவில், இன்னும் பல்வேறு அமைப்புகளில், தான் தலைவனாகத்திகழ வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அதை அடைவதற்காக பல்வேறு வழிமுறைகளை அவன் நாள்தோறும் கையாளுகிறான். மனிதனின் மனம் எப்பொழுதும் அதிகாரத்தை சுவைக்க விரும்புகிறது. அந்த அதிகாரம் கிடைப்பதற்கு தலைமைப்பதவி மனிதனுக்குத்தேவைப்படுகிறது.

தலைவனாக வரவேண்டும் என்று ஆசைப்படுவதில் தவறில்லை நண்பர்களே! ஆனால் அதற்கான தகுதிகளை,நல்ல பண்புகளை நாம் பெற்று இருக்கிறோமா? என்று ஒரு நொடி எண்ணிப் பார்க்க வேண்டும்.



'நாங்கள் மனிதனை மந்திரி ஆக்கினோம்! அந்த மந்திரியை மீண்டும் மனிதனாக எங்களால் மாற்ற முடியவில்லை' என்று பலர் சொல்வதின் வெளிப்பாடு, ஒரு நல்ல மனிதனை நாங்கள் ஓட்டுப்போட்டு தேர்வு செய்து மந்திரியாக்கினோம். ஆனால் அந்த மனிதன் மந்திரியாக மாறிய பின்பு தனக்குக் கிடைத்த அதிகாரத்தின் மூலம் மக்களுக்கு நல்லது செய்வதற்குப் பதிலாக, அல்லல்களைத்தான் செய்தார். அதன் காரணமாக மக்கள் மனதில் அவர் நிற்கவில்லை. மீண்டும் தேர்தல் களத்தில் நின்றபோது அதே மக்களால் அடுத்தமுறை தூக்கி எறியப்பட்டார்.

பொதுவாக எந்த இடத்திலும் எவரும் தலைவராக

வரமுடியும். அப்படித்தலைவராக வருவோர் சிறப்பைப் பெறுவதற்கு எது தேவை? என்பதுதான் நமக்கு முன்னேயுள்ள கேள்வி!

சிலர் தனித்த திறமையுள்ளவன் மட்டுமே தலைவனாகத்திகழ்ந்து புகழ் பெற முடியும் என்பார்கள். இன்னும் சிலரோ இல்லை யில்லை, தனித்திறமையை விட, தனக்குக்கீழே இருப்பவர் களையெல்லாம் ஒருங்கிணைத்து, வெற்றி பெறுவதே ஒரு தலைவனுக்கு அழகு என்பார்கள்.

தலைமைப்பண்பு குறித்து ஆய்வு செய்த அறிஞர்கள், தலைவன் என்பவனுக்கு எவையெல்லாம் தேவையென்று தங்களின் தீர்ப்பாகச் சொல்லியுள்ளது மூன்றே மூன்றுதான் நண்பர்களே! அவை ஒன்று ஆளுமைப்பண்பு, இரண்டு அனைவரையும் ஒருங்கிணைத்தல்,மூன்று திறமையை கண்டு அறிதல் ஆகியவை தான் ஒரு புகழ்பெற்ற திருக்கோவில் ஒன்றில் குடமுழுக்கு விழா நடைபெறுவதற்காக, திருப்பணிக்குழு ஒன்றை அமைக்கவும்,அதற்கு ஒரு தலைவரைத்தேர்வு செய்வதற்கும்,அந்த ஊரில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஏராளமானோர் வந்திருந்தனர். பலரும் பல்வேறு விதமான கருத்துக்களை தங்களது எண்ணமாகத் தெரிவித்தார்கள்.திருப்பணிக்குழுவிலே பணியாற்றுவதற்கு ஆட்களை தேர்வு செய்வதற்கு முன்பு,யாரை திருப்பணிக் குழுவின் தலைவராகத்தேர்வு செய்வது என்பது விவாதமானது.

பலரும் பெரும் பணக்காரர் களின் பெயர்களைச் சொன்னார்கள். அவர்களில் பலருக்கு எதிர்ப்பும்,ஆதரவும் எழுந்தது. அந்தக் கூட்டத்தில் பங்குபெற்ற சிலர் சொன்னார்கள், திருப்பணிக்குழுவிற்கு பணக்காரர் ஒருவரை நியமித்தால்தான் நல்லது. அவரே தனிப்பட்ட முறையில் பெருந்தொகை ஒன்றை நன்கொடையாகக் கொடுப்பார். அவர் தலைவராக இருந்தால், பணவசதி படைத்த பலரும் நன்கொடை கொடுப்பார்கள். அதனால் திருக்கோவில் குடமுழுக்கு விழா விரைவாக நடைபெறும் என்று

சொன்னார்கள்.

பலமணி நேர விவாதம் நடைபெற்றதற்குப் பின்னால், தலைமைப் பண்புகள் நிறைந்த ஒரு நல்ல மனிதரை திருப்பணிக்குழுவின் தலைவராகத்தேர்வு செய்தனர். அவர் தேர்வானதை பொறுத்துக்கொள்ள முடியாத சில பணக்காரர்கள் கூட்டத்தை விட்டு வெளியேறினார்கள்

வெளியே போகும்போது, ‘இவனெல்லாம் தலைவராக இருந்தால், குடமுழுக்கு விழா தற்சமயம் நடைபெறாது, இன்னும் 12 ஆண்டுகள் கழித்துத்தான் நடைபெறும் என்று தங்களின் வெறுப்பை உமிழ்ந்துவிட்டுப்போனார்கள். இதுபோன்ற வசுவுகளை எல்லாம் காதிலே வாங்கிக் கொண்டு அமைதியாகத் திகழ்ந்தார் புதிதாகப் பொறுப்பேற்ற திருப்பணிக் குழுத்தலைவர்.



திருப்பணிக்குழுவின் தலைவர் பத்துநாட்கள் இடைவெளிக்குப் பின்னால் திருப்பணிக்குழுவின் கூட்டத்தைக்கூட்டினார். அந்த முதல் கூட்டத்திற்கு எல்லோரும் வந்திருந்தனர். தலைவர் எழுந்து பேசத் தொடங்கினார். நான் திருப்பணிக்குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டாலும்,நாம் அனைவருமே தலைவர்கள் தான். குடமுழுக்கு விழாவை மிகச்சிறப்பாக நடத்த வேண்டிய பெரிய சவால் நம்முன்னே உள்ளது. நாம் எல்லோரும் ஒன்றாக நின்று பணிகளைச்செய்தால்தான், நம்மை நம்பி பொறுப்பைக் கொடுத்த மக்கள் மகிழ்வார்கள்.

எனவே இது ஒரு தனிமனிதனின் முயற்சி அல்ல! நாம்

அனைவரும் ஒன்றாகி பணியாற்றும் கூட்டுமுயற்சி யாகும். இந்த வார்த்தைகளைக் கேட்ட அனைவரும் உற்சாகத்தோடு பணியாற்றத் தொடங்கினார்கள். தலைவரோ தனது குழுவில் இடம் பெற்றுள்ளவர்களின் திறைமையை அறிந்து,அதற்கு ஏற்ற பணிகளைப்பிரித்துக் கொடுத்து,அவர் அவர் பொறுப்பிலே விட்டுவிட்டார். தங்களைநம்பி ஒப்படைத்த பொறுப்பை உறுப்பினர்களும் சிறப்பாகச்செய்தார்கள்.

தலைவர் தன்னை ஒருபோதும் தலைவர் என்று நினைக்காதவர். அதனால்தான் மற்றவர்களை முன்னிலைப்படுத்தி மகிழ்வாரே தவிர தன்னை ஒருநாளும் முன்னிலைப்படுத்திக்கொள்ள மாட்டார். தான் தலைவராக தேர்வானதை விரும்பாமல் வெளியேறிய அந்த ஊர் பணக்காரர்களின் வீடுகளுக்குச்சென்று திருக்கோவில் குடமுழுக்கு விழாவிற்கு நன்கொடை கேட்டார். அந்த நேரத்தில் கூட தன்னையவர் தலைவர் என்று சொல்லிக்கொள்ளாமல், குடமுழுக்கு விழாவை நடத்தி வைக்க மக்களால் நியமிக்கப்பட்ட சேவகன் என்று தான் தன்னைச்சொல்லிக் கொள்வார்.

ஊர்மக்கள் அனைவரிடமும் பாசத்தோடும்,நேசத்தோடும் பழகிய காரணத்தால்,அந்த ஊர் திருக்கோவிலின் குடமுழுக்கு விழாவை மூன்றுமாத காலத்திற்க்குள் கிட்டதிட்ட ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிகச்சிறப்பாக நடத்த அவரால் முடிந்தது என்றால், அதற்கு முழு முதற்காரணம், அனைவரையும் ஒருங்கிணைத்துஅன்புசெலுத்தி எல்லோரது மனங்களிலும் குடமுழுக்கு விழாவினை சிறப்பாக நடத்தவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கிய தன்மைதான் காரணம்.

ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்தாலும்,ஒராயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தாலும் அனைவரையும் ஒருநிலையில் வைத்து மரியாதை செய்தவர் திருப்பணிக்குழுத்தலைவர்.

சிலர் அவரிடம் வந்து எங்களால் நன்கொடை தருவதற்கு மனம் இருந்தாலும் பணம் இல்லை. அதற்குப்பதிலாக நாங்கள் உங்களோடு நின்று உழைப்பைத்தர தயாராக உள்ளோம் என்றபோது, அவர்களையெல்லாம் இருகரம் நீட்டி வரவேற்று மகிழ்ந்தவர் அந்த திருப்பணிக் குழுத்தலைவர்.

இத்தகைய பண்பு அவரிடத்திலே இருந்த காரணத்தால்தான், அவராலே குடமுழுக்கு விழாவை மிகச்சிறப்பாக நடத்திக்காட்ட முடிந்தது. தன்னை இகழ்ந்தவர்களையும், ஏளனமாகச்சிரித்தவர்களையும் கண்டு அஞ்சாமல், பகைவர்களையும் நண்பர்களாக்கிக்கொண்டு, பணியாற்றியதால் பார்போற்றும் வெற்றியை அவரால் பெற முடிந்தது. அதுதான் தலைவர்க்குத் தேவைப்படும் தலைமைப் பண்பாகும்.

எல்லோரும் தலைவர் ஆகலாம். தலைவர் ஆன எல்லோரும் மக்கள் மனதில் தலைவராக நின்றதில்லை. தலைவராக வர விரும்புவோர் அதற்குரிய தலைமைப்பண்புகளை வளர்த்துக்கொண்டு, களத்திற்கு வாருங்கள். உங்களின் சுயநலமற்ற உழைப்பால் காலம் கடந்தும் மக்கள் மனதிலும், வரலாற்றிலும் நீங்கள் என்றென்றும் தலைவராக வாழ்வீர்கள்! மக்கள் உங்களை கொண்டாடுவார்கள்! உலகம் உங்களை உற்று நோக்கும்! புகழ் உங்களிடம் வந்து சேர அனுமதி கேட்கும்! நாளைய உலகம் உங்களை மதிக்கும்!





கட்டுரை ஆசிரியர்
தொடர்புக்கு: 9791033913,
aamchennai@gmail.com

"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



## PL RAMANATHAN (KANDANUR)

INSURANCE ADVISOR
LIC of india, Thiruvotriyur Branch
Mobile : 99 40 132 132

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA

# வாங்க பேசலாம் ..!



(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

-பேரா.கு.அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

பகுதி - 5

**நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம்...வாங்க பேசலாம்..!**




உலகில் இருவிதமான மொழி நடைகள் உள்ளன. ஒன்று பேச்சு வழக்கு மற்றொன்று எழுத்து வழக்கு. இவற்றில் எழுத்து வழக்கு மாற்றமில்லாது இருக்கும். ஆனால், பேச்சு வழக்கு வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபட்டுக்கொண்டே இருக்கும். பொதுவாகப் பேசப்படும் மொழியே, வட்டாரத்திற்கு வட்டாரம் சிற்சில மாறுதல்களோடு பேசப்படுகிறது. இதனையே நாம் வட்டார மொழி என்கிறோம். தமிழ் ஒரே மொழிதான். ஆனால், சென்னையில் பேசுகின்ற தமிழ், கோவைத் தமிழ், மதுரைத் தமிழ் என்று பல வட்டாரங்களில் பேசப்படுவதால் வட்டார மொழிகளாகின்றன.

நகரத்தார்கள் பல நாடுகளுக்குத் தொழில் நிமித்தமாகச் சென்ற போது தங்கள் தேவைக்காக அந்நாட்டுச் சொற்களை அறிந்துகொள்ள வேண்டியிருந்திருக்கிறது. ஆயினும் நம் நகரத்தார் பேசுகின்ற சொற்களில் வேற்று மொழிச் சொற்கள் குறைவாகவே இருக்கும். தூய தமிழ்ச் சொற்களே அதிகம் பயன்படுத்தி வந்துள்ளனர். அப்படிப்பட்ட ஒரு சொல்

## அக்கடா

இது வரைக்கும் பட்ட பாடெல்லாம் போதும். என்னைய விட்டுடுங்க. காசி ராமேஸ்வரம்னு போயி அக்கடான்னு இருக்கப் போறேன் என்று பலர் வாழ்க்கையை வெறுத்துப் பேசுவதைக் கேட்டிருப்போம்.



நெடுந்தூரம் நடந்து வந்தவரும், இரவு பகல் பாராது கடுமையான உழைப்பவரும், இறுதியாக இளைப்பாரும் போது அக்கடா என்று சொல்லி அமர்வது அக்காலவழக்கம்.

அதிர்ச்சியான நிகழ்வு ஒன்றை, ஆச்சரியமான நிகழ்வு ஒன்றை, பாம்பைக் கண்ட போதும், நோயினால் வருந்தும் போதும், துன்பத்தால் வருந்தும் போதும் நம்மையும் அறியாமல் அம்மாடியோவ் எவ்வளவு பெருசு என்றோ அம்மா முடியலையே என்றோ சொல்வோமல்லவா? அது போன்றதொரு சொல்லே அக்கடா என்பதும்.

# ஸ்ரீ நித்யகல்யாணி
## சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani







**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

அக்கட என்னும் சொல்லே அக்கடா என்னும் சொல்லாக மருவி வழங்கி வருகிறது.

அக்கடா என்பது ஒரு தனிச் சொல் அல்ல. அக்கை அக்க அக்க+அடா =அக்கடா. அக்கை என்ற சொல்லுக்கு அம்மா என்பது பொருள். அக்க என்றால் அம்மாவை அழைப்பதற்கான ஒரு சொல். அடா என்பது விளி இடைச் சொல். விளித்தல் என்றால் அழைப்பது என்பது பொருள். இடைச் சொல் என்பது தனித்துப் பொருள் தாராது. அந்தவகையில் அம்மாவை அழைப்பதே அக்கடா என்னும் சொல்லாக உருவெடுத்துள்ளது.

கம்பர் அக்கட என்ற இச்சொல் எடுத்தாண்டிருக்கிறார்.

மக்களும் குரங்குமே வலியராம் எனின்,

அக்கட, இராவணற்கு அமைந்த ஆற்றலே

துன்முகன் என்னும் அரக்கன் இராவணனைப் பார்த்துக் கூறுகிறான். இராவணா! உன் ஆற்றல் எப்பேர்ப்பட்டது. உன்னால் எட்டுத் திசை யானைகளும் வலிமையை இழந்துள்ளன. தேவர்கள் அனைவரும் உன்னைக் கண்டு பயந்து நடுங்குகின்றனர். சிவன் வசிக்கும் கயிலாய மலையும் உன்னால் வலிமையின்றிப் போனது. இப்படிப்பட்ட வலிமை மிகுந்த நீ, இப்போது. சாதாரண இரு மனிதர்களும்(இராம-இலக்குவன்), ஒரு குரங்கும்(அனுமன்) வலிமையுடையவர்கள் என்று கூறுகிறாயே. உன்னைக் கண்டால் எனக்கு வியாப்பாக இருக்கிறது. உன்னுடைய ஆற்றல் வியக்கத் தக்கதாகும் என்கிறான். இங்கு இராவணனைக் கண்டு வியக்கும், அதிசயிக்கும் சொல்லாக கம்பர் அக்கட என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

உடலோ, மனமோ வேதனைப் படும் போதும், வியப்பின் போதும் சொல்லப்படும் ஒரு சொல்லு அக்கடா. இதனை நகரத்தார் இன்று வரை பயன்படுத்திக்கொண்டிருப்பது போற்றுதலுக்குரியது.

அக்கடாவுக்குள் இவ்வளவு அர்த்தமா? என்று நீங்கள் மனதுக்குள் நினைப்பது எனக்குக் கேட்கிறது. ஆதலால் போதும். அடுத்த சொல்லுக்குச் செல்வோம்.

## அக்கப்போர்



உன்னோட ஒரே அக்கப்போராப் போச்சு. பேசாமா ஒரு இடத்துல உட்காரு என்று இன்றும் கூட நம் நகரத்தார் தாய்மார்கள் பெற்ற பிள்ளைகளைக் கூறுவது உண்டு.

அக்கப்போர் என்பதற்குத் தொந்தரவு, தொல்லை என்பன பொருள்கள். அக்கு+போர்=அக்கப்போர் என விரியும். அக்கு என்றால் துண்டு என்பது பொருள். அக்கக்கா பிச்சிப் போட்டுட்டான் என்று கூறும் போது, துண்டு துண்டுடாகப் பிய்த்து விட்டான் என்பது பொருளாகிறது. துண்டுப் போர் , அதாவது சிறிய போர் , சிறிய கலகம், சிறிய அளவிலான தொந்தரவு என்பன பொருள்களாகக் கொள்ளலாம். அப்படிப்பட்ட தூய தமிழ்ச் சொல்லே அக்கப்போர்.

## அங்கிட்டு இங்கிட்டு/அங்ஙன இங்ஙன



என் மகன் என்னை அங்கிட்டு இங்கிட்டு நகர விடமாட்டான் என்பதில் அங்கிட்டு, இங்கிட்டு என்பது நம்மவர்கள் மட்டுமே பயன்படுத்தும் ஒரு சொல். அங்கு+இட்டு= அங்கிட்டு,

இங்கு+இட்டு=இங்கிட்டு என்று அச்சொல்லைப் பிரிக்கலாம். அந்தப் பக்கம், இந்தப் பக்கம் என்ற சொற்களின் மருவிய வடிவமே அங்கிட்டு, இங்கிட்டு என்ற சொற்கள். இவையே அங்ஙன இங்ஙன என்றும் அதே பொருளில் வழங்கப்படுகின்றன.

## அசடு



அவனா? அவன் சரியான அசட்டுப் பயலாச்சே! , அசடு வழியுது தொடச்சுக்க என்ற தொடர்களில் அசடு என்ற சொல்லுக்கு அறியாமை என்பது பொருள். அசட்டுப் பையன் என்றால் அறியாமை நிறைந்த பையன் என்று பொருள்கொள்ளலாம். அசடு வழிகிறது என்றால் அறியாமை நிறைந்து வழிகிறது என்பது பொருள்.

அ என்ற எழுத்தில் வட்டாரச் சொற்கள் இன்னும் உள்ளன. அவற்றின் விரிவான பொருளை வரும் மாதத்தில் காண்போம்.

– தொடர்ந்து பேசுவோம்

உள்ளத்தில் நேர்மையும்,
தைரியமும் இருந்தால்
நடக்கும் பாதையும்
நேரானதாகவே இருக்கும்...!
- பாரதியார்



# சித்திரையே வருக

சித்திரை திங்களே வருக வருக
கோடை மழையள்ளித் தருக தருக
சித்திரை என்பது வெயிலின் தொடக்கம்
சித்திரை என்றாலே குளிருக்கும் நடுக்கம்

பள்ளி கல்லூரிக்கு கோடை விடுமுறை
அலுவல் பணிக்கு ஏது விடுமுறை ?
சித்திரைத் திருவிழா மகளிர் கூட்டம்
அவரவர் பெருமையை நகை நட்டு காட்டும்

வெயிலுக்கு கைகால் முளைத்திடக் கூடும்
வியர்வை நதியோ கரையைத் தேடும்
வெயிலில் நிழலும் உயிராய்ப் பிறக்கும்
இருளைக் கண்டால் இரவாய் உறக்கம்

உறங்கிய குடையும் துறந்தது துயில்
உழைத்துக் கிழிந்த குடைக்குள் வெயில்
அக்னி நட்சத்திரம் வெளிவரும் மாதம்
ஆண்டுகள் தோறும் தவறாமல் நேரும்

தொடுப்பின் பெற்றோர் ஆடியில் சேர
அதனால் பிறந்து தொடுப்பாய் மாற
பிறந்த நாள் கொண்டாட்டம் பதினைந்து நாளாக
மழை வந்து நனைக்க நனைகின்ற நாமாக.



கவிஞர் எம்.சோலை
காரைக்குடி .

# உங்களிடம் பழைய ஷேர் சர்டிபிகேட்கள் உள்ளதா ?




செபி சுற்றறிக்கையில் ஷேர் சர்டிபிகேட்களை எலக்ட்ரானிக் வடிவில் அதாவது டீமேட் கணக்கில் மாற்ற 30.06.2024 வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. 7 வருடங்கள் தொடர்ந்து டிவிடெண்ட் பெறாமல் இருந்தால் அத்தகைய கம்பெனி ஷேர்கள் IEPF (INVESTOR EDUCATION AND PROTECTION FUND) மாற்றப்படும் தங்கள் குடும்பத்தில் அவ்வாறு ஏதேனும் ஷேர்கள் இருந்தால் மற்றும் காணாமல் போய் இருந்தால் வாரிசுதாரர்கள் தகுந்த ஆதாரங்கள் சமர்ப்பித்து அவர்கள் பெயரில் டீமேட் கணக்கிற்கு மாற்றி கொள்ளலாம்.

## கடைசி தேதி: 30.06.2024

மேலும் விவரங்களுக்கு :

**S.ராமநாதன் – 9840466531.**
**RM.சுப்பிரமணியன் –9840635152.**

பெண் கதவு, ஆண் பூட்டு - 5

# ஆணின் மனம்



சேவு.முத்துக்குமார்,
காரைக்குடி
94432 88931


ஒரு ஆண் பாசத்தைப் பைத்தியம் போல வெளிப்படுத்துவான். ஆனால் அவன் வெறுத்தான் என்றால் மீண்டும் மனதில் பாசம் வருவது கடினம்.

ஆணுக்குப் பாசமாகப் பேசி அன்பு காட்டத் தெரியாது. அவன் ஒருவர் மேல் பாசம் வைத்தால் கோபப்படுவான், சண்டை போடுவான், இது தான் ஆண்களின் உச்சக்கட்ட அன்பின் வெளிப்பாடு!!!

ஆணின் மௌனம் ஒரு போதும் சம்மதத்தின் பொருளில்லை, அது அழுகை, வெறுப்பு, அவமானம், தோல்வி இவற்றில் ஏதாவது ஒன்றின் வெளிப்பாடே...

சண்டை, சச்சரவு இல்லாமல் குற்றம் குறை கூறாமல் அடுத்தவரைப் பற்றிப் புரளி பேசமால் மனைவி அமைய வேண்டும் என்பதே ஆணின் மன விருப்பாக இருக்கும், காலையில் அலுவலகம் கிளம்பும் போது சிரித்த முகத்துடன் தெருவரை வந்து நம்மை மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தாலே போதும், அந்த நாள் சொர்க்கமாகும் ஆணுக்கு.


மாமியார் மருமகள் பிரச்சனை என்பது உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே இருக்கும் நடைமுறைகளில் ஒன்று. ஆகவே இருவரும் பிரச்சனைகளை ஆணின் காதுக்குக் கொண்டு வராமல் இருந்தாலே போதும். ஆணுக்கு மிகுந்த நிம்மதிதான். அலுவலகத்தில் மேலாளரிடம் நற்பெயர்



வாங்கினாலும், என்ன செய்தாலும் இல்லாளிடம் நற்பெயர் வாங்க முடியவில்லையே என்பது ஆணின் மனவோட்டமாகப் பெரும்பாலும் உள்ளது. மேலும் அலுவலகத்திலிருந்து வேலை முடித்துக் களைத்து, இல்லம் வரும் மாலை வேளையில், முகம் கழுவி, பூ வைத்து இனிய முகத்துடன் வரவேற்கும் மனைவியையே ஆணின் மனம் விரும்பும் மன அழுத்தத்தைப் போக்கும். மாமருந்து மனைவியின் புன்னகையே என ஆண் நினைக்கும்போது பரட்டைத் தலையுடனும், பரதேசி போன்ற கோலத்துடனும் வந்து நிற்கும் மனைவியைப் பார்க்கும் போது, அவன் மனம் மிகுந்த பதற்றமடையும். ஆணின் மனம் அறிந்து, நடக்கும் பெண் கிடைத்து விட்டால் சொர்க்கத்தை மேலோகத்தில் தேட வேண்டிய அவசியமில்லை, பூலோகத்திலேயே காணலாம்.

கேள்விகள் கேட்பது என்பது ஆண்களுக்குப் பிடிக்காது. எங்க இருக்கீங்க, என்ன செய்றீங்க? ஏன் இவ்ளோ லேட், எங்க ஊர் சுத்திட்டு வர்றீங்க ? – நீங்க எங்க போயிருப்பிங்கன்னு தெரியும்? போன்ற கேள்விதான் கணவர்களை எரிச்சலுக்கு ஆட்படுத்தும். ஆகவே கேள்வி கேட்பதை மனைவிகள் தவிர்க்க வேண்டும், அதே வேளையில் கணவர்கள் எங்கு சென்றாலும்,

சொல்லிவிட்டுச் செல்லவேண்டும்.



சுற்றி வளைத்துப் பேசுவது ஆணுக்குப் பிடிக்காது.ஜாடை பேசுவது, பிள்ளைகளைத் திட்டும் சாக்கில் கணவனைத் திட்டுவது,பொருட்களை நங்கென்று வைப்பதுப் போன்றவை ஆண்களைப் பெரிதும் பாதிக்கும்.

ஆணின் மனம் அறிந்து இயங்கினாலே போதும் இல்லறம் சிறக்கும்.

நன்றி : ஓவியம், மோகன் மணிமாலா


– தொடரும்.

அழும் பொழுது தனியாக அழு.
சிரிக்கும் பொழுது நண்பர்களுடன் சிரி.
கூட்டத்தில் அழுதால் நடிப்பு என்பார்கள்.
தனியாக சிரித்தால் பைத்தியம் என்பார்கள்.
- கண்ணதாசன்.



# தற்போது விற்பனையில்

இயற்கை முறையில் அடுப்பில்லா சமையல்




புத்தகம் வேண்டுவோர் தொடர்புக்கு:

99940 37121

**புத்தகங்கள் கிடைக்குமிடம் :**

பழ வீரப்ப பிள்ளை

நாட்டு மருந்து கடை

பூஜை & வேள்வி திரவியங்கள்

தயாரிப்பாளர்கள்

சேலம் – 636001 தமிழ்நாடு

☎ 0427 2253743

# செட்டிநாட்டு சித்திரகுப்தநாயனார் பூசை

இராம.நா .இராமநாதன் - ஆ.தெக்கூர்



நகரத்தார் மகளிர் கடைபிடிக்கும் வழிபாட்டு முறைகளில் ஒன்று சித்திரகுப்த நாயனார் பூசை. இந்த பூசையானது முன்பு நமது ஆச்சிமார்கள் மத்தியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வழிபாட்டு முறையாக இருந்து வந்துள்ளது. தற்போது இந்த வழிபாட்டு முறையானது நேரமின்னை மற்றும் நகர வாழ்க்கைச் சூழல் காரணமாக பலரும் கடைபிடிப்பது கிடையாது . இருப்பினும் சிலர் இன்றும் இந்த வழிபாட்டு முறையை தவறாது கடைப்பிடித்து வருகின்றனர். நகரத்தார் வாழ்வியலில் சிறப்பு வாய்ந்த வழிபாட்டு முறையை வரும் மற்றும் வளரும் இன்றைய தலைமுறையினர் அறியும் வகையில் அமைவதே இக்கட்டுரையின் நோக்கம் .

### பூசைக்கான நாளும் காரணமும் :

சித்தரகுப்த நாயனார் பூசையானது சித்திரை மாதத்தில் வரும் சித்திரை நட்சத்திரமும் முழுநிலவும் கூடும் நாளில் சித்திரகுப்த நாயனாரை நினைந்து பகல்பொழுதில் எதுவும் உண்ணாது நோன்பு இருந்து மாலையில் வழிபடுவர். இந்த நோன்பின் நோக்கம் நமது வாழ்வில் புண்ணியங்கள் அதிகம் செய்திடவும், பாவங்கள்



செய்யதிடாமல் இருக்கவும் , செய்த பாவங்களில் இருந்து விடுபட பாவ புண்ணிய கணக்கு எழுதும் சித்திரகுப்த நாயனாரை தோன்றிய சித்திரை முழுநிலவு நாளில் அவரை நினைத்து இந்த வழிபாடானதுகடைபிடிக்கப்படுகின்றது .

## நகரத்தார் வாழ்வியலில் சித்திர குப்த நாயனார் பூஜை :

முன்பு நகரத்தார்கள் திருமணத்தில் பெண்ணுக்கு வைக்கும் சாமான்களில் வெள்ளி மற்றும் வெண்கலத்தில் இந்த வழிபாட்டு பொருட்களான நிறைகுடத்திற்கான கலசம், தேங்காய், மாவிலை , ஏடு எழுத்தாணி , பாவர்னக் கிண்ணம் ( சிறிய 16 கிண்ணங்கள் ) குலையுடன் கூடிய மாங்காய் வெற்றிலை பாக்கு போன்ற பொருட்களையும் செய்து வைப்பர் சற்று வசதிபடைத்தவர்கள் வெள்ளியிலும், வெண்கலத்திலும் செய்து வைப்பர். முன்பு திருமணத்தில் பெண்ணுக்கு வைக்கு வெள்ளிச் சாமான்களில் ஏடு எழுத்தாணி கட்டாயம் இடம்பெற்று இருக்கும்.



## பூஜையின் நடைமுறை :

இந்த நோன்பானது இரண்டு விதமாக கடைபிடிக்கப்பட்டு வந்தது. அதில் ஒரு விதம் பாவர்னக் கிண்ணத்தில் (16 சிறிய கிண்ணங்கள்) நவதானியங்கள் , பஞ்சு , உப்பு , புளி மிளகாய், தட்டைப்பயறு , அரிசி போன்றவற்றை எடுத்து வைத்தும் சில இடங்களில் பாவவர்ன கிண்ணத்தை சுலகின் மேல் வைத்தும் வழிபடுவர். மற்றொரு வகை இந்த பாவவர்ன கிண்ணத்த்தில்




தானியங்கள் எதுவும் வைக்காது வழிபடுவதும் என்பது ஒருவகையான வழிபாட்டு முறை . தானியங்கள் வைப்பது மட்டுமே மாறுபடும் மற்றபடி இம்முறைகள் எல்லாம் ஒன்றாகவே அமைந்திருக்கும்.

சித்திரகுப்த நாயனார் வழிபாடானது பெரும்பாலும் மாலையில் விளக்கு ஏற்றிவைத்து நடுவிட்டுக் கோலமிட்டு ஒரு மனையிட்டு சித்திரகுப்பதர் உருவம் வரையத் தெரிந்தவர்கள் பச்சரி மாவில் வரைந்து வைத்தும் அல்லது மனைப்பலகையில் ஏடு எழுத்தாணி வைத்து மலர்சரங்கள் கொண்டு அலங்கரித்து உப்பு மற்றும் இனிப்பு கொழுக்கட்டை , பாயசம் ,பொங்கல் , மாவிளக்கு ,நீர்மோர் , பானகம் , வெள்ளரிக்காய் , கொத்தோடு மாங்காய் , குலையுடன் தேங்காய் மற்றும் நுங்கு , முக்கனிகள் , மற்றும் தாம்பூலம் வைத்து இயன்ற பலகாரங்கள் (தேன் குழல் , அதிரசம், சீடை , சீப்புசீடை , பணியாரம் ,வடை பொன்றவை) செய்து வைத்து சித்திரகுப்த நாயனார் கதையை குடும்பமாய் அமர்ந்து படித்து முடித்தபின் வெண் சங்கு முழங்கி நிவேதனம் செய்து தீபாரதனை கண்டபின் அன்றைய இரவு முழு நிலவின் உதயத்தை கண்டு வழிபட்டதுடன் நோன்பானது நிறைவு பெறும் . அன்றைய தினம் வீட்டு உணவில் தட்டைபயறு , எருமைப்பால் அல்லது எருமைத்தயிர் சேர்த்து கொள்வது ஒரு மரபு . சித்திரகுப்த நாயனார் கதையை அன்றைய தினம் கேட்டாலே புண்ணியம் பாவங்கள் குறையும் என்ற நம்பிக்கையும் உள்ளது.

இந்தவருடம் சித்ரா பௌர்ணமி வரும் ஏப்ரல் 23.04.2024 அன்று வருகிறது . இந்நாளில் நாம் அனைவரும் சித்திரகுப்த நாயனாரை வழிபடுவதோடு , வளரும் இன்றைய தலைமுறையினருக்கு நம் மண்ணின் இவ்வழிபாட்டினை நினைவு கூர்ந்து அனைவைரையும் வளம் பெற செய்வோம்.

# கூடைகள் விற்பனைக்கு

அழகான நல்ல தரத்துடன் நீண்ட நாள் உழைக்கக் கூடிய செட்டி நாட்டு கூடைகள் தயாரித்து விற்பனை செய்கிறோம்

உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மற்றும்
Return gift Purpose க்கும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்.



தொடர்புக்கு:
N.சித்ரா, ஆத்தங்குடி
9585328941



# வைத்தீஸ்வரன் கோவில் பாதயாத்திரை 2024
# பயண விபரம்

உ
சிவமயம்





அன்புடையீர்.

வணக்கம் நிகழும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை மாதம் 4ம் தேதி, 17.04.2024 புதன்கிழமை தொடங்கி சித்திரை மாதம் 10ம் தேதி 23.04.2024 செவ்வாய் கிழமை வைத்தீஸ்வரன் கோயில் சென்றடையும் பயண விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 17.04.2024 | புதன்கிழமை | பி.அழகாபுரி, கீழச்சீவல்பட்டியில் இருந்து புறப்படுதல் |
| 18.04.2024 | வியாழக்கிழமை | புதுக்கோட்டை |
| 19.04.2024 | வெள்ளிக்கிழமை | கந்தர்வகோட்டை |
| 20.04.2024 | சனிக்கிழமை | பூண்டி |
| 21.04.2024 | ஞாயிற்றுக்கிழமை | திருவலஞ்சுழி |
| 22.04.2024 | திங்கள் கிழமை | மூவலூர் |
| 23.04.2024 | செவ்வாய் கிழமை | வைத்தீஸ்வரன் கோவில் சென்றடைதல் |



# வருடமகள் பிறந்து வந்தாள்..!!!

வருடமகள் பிறந்து வந்தாள்
வாழ்த்துக்கள் வழங்க வந்தாள்

சித்திரைத் திங்களாய் பிறந்து
ஸ்ரீகுரோதி ஆண்டென பெயர்புனைந்து
பன்னிரண்டு திங்கள் கண்டுவளர
எண்ணமெங்கும் எழுச்சி கொண்டாள்

நாழிகையை நாசூக்காய் நகர்த்தி
நிமிடங்களை நிம்மதியாய் கழித்து
நேரத்தை தனதாக்கிக் கொண்டு
நேர்த்தியாய் நிமிர்ந்து நின்றாள்


சாதிமத பேதம் இன்றி
தமிழர் பண்பாடு பறைசாற்றி
வண்ணத் தமிழ் வாய்மொழியாக
வாஞ்சையுடன் தவழ்ந்து வந்தாள்

வரவிருக்கும் விநாடிகளை
இன்று வரவேற்கும் விதமாக
வாழ்த்துகளாய் விரிந்து நின்றாள்
வண்டமிழாய் வளைய வந்தாள்

உலகமெங்கும் தமிழ் மக்கள்
உற்சாகம் உவகை பொங்க
உளம்கனிந்து வாழ்த்து இசைக்க
உன்னதமாய் உலா வந்தாள்



அரு. சிவகாமி இராமனாதன்
ஒக்கூர், நவிமும்பை



# “நகரத்தார் திருமணம்”

(நகரத்தார் திருமண நடைமுறைகள் பற்றிய சிறப்புத் தொடர்)

-கட்டுரைத் தொகுப்பு: அண.சீனிவாசன், காரைக்குடி

பகுதி - 9





### பிள்ளை எடுக்கிக் கொடுத்தல் :

சடங்குக் குழவியை சிகப்புத் துணியில் அதைக் குழந்தையாகவே கருதி பெண்ணின் தந்தை எடுக்கிக் கொடுக்க, பெண் நமஸ்காரம் செய்து வாங்கிக் கொள்வதுதான் இச்சடங்கு. இதுபோல் பெண் வீட்டு ஆண்களில் முக்கியமானவர்கள் எல்லோரும் பிள்ளை எடுக்கிக் கொடுத்து ஆசீர்வாதம் செய்யவேண்டும். அரசாணிக்குப்

### பொங்கல் இடுதல் :

பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக்காலுக்கு முன் பொங்கல் இட்டு இறக்க வேண்டியது. பிறகு அதை வண்ணாத்தியிடம் கொடுக்க வேண்டும்.

பெண் தாய் வீட்டிலிருந்து கணவன் வீட்டுக்குச் செல்ல இருப்பதால் தன் தாயிடமும் தாயதிகளிடமும் சொல்லிக் கொள்ள வேண்டும். பெண் நடு வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பத்தியில் விரித்திருக்கும் பாய் ஒன்றில் கிழக்கு முகமாக கையில் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்துடன் நிற்க வேண்டும். பெண்ணின் பெற்றோர், உறவினர், பங்காளிகள் ஒவ்வொருவராக அந்தப் பாயின் மீது எதிரில் நிற்க, அவர்களிடம் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தைக் கொடுத்து, அவர்கள் காலில் விழுந்து வணங்கி, சென்று வருகிறேன் என்று சொல்லி வாங்கிக் கொள்ள வேண்டும்.



### குடி அழைப்பு:

பெண் சொல்லிக் கொண்டதும் மணமக்கள் இருவரும் நடு வீட்டில் உட்கார்ந்து இருந்து எழுந்து வந்து முகப்பு நடுப் பத்தியில் கோலத்திற்கு முன் வந்து நிற்பார்கள். பெண்ணுக்கு ஆயாள் வந்து சிலேட் விளக்கு வைத்து, அழகு ஆரத்தி எடுத்து, விபூதி பூசி கட்டுச் சோறுடன் வழியனுப்பி வைப்பார்கள். மாப்பிள்ளைக்கு வலது பக்கம் நிற்கும்படியாக பெண் அழைத்துச் செல்ல வேண்டியது. இது சமயம் பெண்ணின் தாயார் பால் பானையை கையில் கொண்டு வரவேண்டும்.

### நகரத்தார் திருமண நடைமுறை கையேடு

மாப்பிள்ளையின் ஊருக்குச் செல்லும் வழியில் ஒரு ஊரணிக் கரையில் இறங்கி, கட்டுச் சோறு சாப்பிட்டு விட்டு மாப்பிள்ளை வீட்டுப் பங்காளி ஒருவரது வீட்டில் தங்கி இருக்கவேண்டும். தற்பொழுது மாப்பிள்ளையின் ஊரில் கோவிலிலோ அல்லது பொது இடத்திலோ இருக்கிறார்கள்.

### அரசாணிக்கால் அவிழ்த்தல் :



பெண்ணின் அம்மான் மனைவி அரசாணிக் காலுக்கு முன் பொங்கல் இட்டு இறக்கியதும், பெண் வீட்டுப் பங்காளிகள் அல்லது பெண்ணின் சகோதரர்களே சர விளக்கை மலை ஏற்றிவிட்டு

சரவிளக்கை எடுத்து வைத்துவிட்டு அரசாணிக் காலில் உள்ள அரச இலை, மா இலை, கிளுவைக் கம்பு உள்பட யாவற்றையும் அவிழ்த்து விடவேண்டியது. பின் பங்காளி வீட்டுப் பையன்களில் ஒருவரை அழைத்து முளைப்பாரியை சர்வச் சட்டியில் வைத்து சிகப்புத் தோம்புத் துணி கொண்டு மூடி, ஊரணியில் அல்லது கிணற்றில் சங்கு ஊதிக் கொண்டுபோய் விட்டுவரவேண்டியது. கிளுவை பாலைக் கம்புகளை வீட்டுத் தோட்டத்தில் ஊன்றி வைக்க வேண்டியது. திருமணத்தன்று மாப்பிள்ளை வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள்

### மாப்பிள்ளை வீட்டில் பெண்ணழைப்பு :



பெண் வீட்டிலிருந்து திருமணம் முடிந்து விடைபெற்று வந்த மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள், மாப்பிள்ளை வீட்டு வளவு வாசலில் கோலமிட்டு பெண்ணழைத்த பொங்கல் இட்டு, அடுப்பைஅகற்றி விடலாம். பெண்ணை அழைத்து வரும் சமயம் மூன்று இலையில் சாதம் படைத்து, ஒரு இலைக்கு 4 வாழைப்பழம், பருப்பு, நெய் ஊற்றிப் படையல் செய்து படைத்த இலைகளுக்கு முன் மூன்று தவலைகளில் தண்ணீர் வைத்து ஒன்றில் குலம் வாழும் பிள்ளையும், மற்றொன்றில் எழுத்தாணியையும் போட வேண்டும். பெண் மாப்பிள்ளை இருவரும் திருமணம் முடிந்துவந்து தங்கி இருக்கும் இடத்திலிருந்து, எல்லோரும் மேள வாத்தியங்களுடன் மணமக்களை ஊர்வலமாக மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வரவேண்டும். வீட்டிற்குள் நுழையும் பொழுது முதலில் வலது

காலை எடுத்து வைத்து நுழையும்படி முன்னதாகவே சொல்லி வைத்து அதன்படி மணமக்கள் செய்தல் வேண்டும்.

பெண்ணும், மாப்பிள்ளையும் வீட்டிற்கு வந்ததும் முகப்பு நடுப்பத்தியில் கோலத்துக்கு முன்பாக நிறுத்தி, மாப்பிள்ளையின் அப்பத்தாள் அழகு ஆரத்தியும், பிள்ளையார் ஆரத்தியும் எடுத்து, விபூதி பூசி உள்ளே வந்ததும் படைத்த இலைக்கு முன்பாக கிழக்கு முகமாக நிற்கும்படி இரு தடுக்கைப் போட்டு ஒன்றில் சடங்கு செய்து கொள்பவர்களும், மற்றொன்றில் பெண்ணும் நிற்க வேண்டும். இவர்களுக்கு அருகில் மாப்பிள்ளை நிற்கவேண்டும்.

குறிப்பாக பெண் ஆனவள், பெண்ணழைத்துக் கொண்டு உள்ளே வரும் பொழுது எந்தத் திசையை நோக்கி உள்ளே வருகிறாளோ அத்திசையைப் பார்த்தவாரே முதல் சடங்கு செய்து கொள்ள வேண்டும். அப்போது திருப்பூட்டுச் சடங்கில் செய்த மாதிரி யாவற்றையும் செய்யவேண்டும். அது முடிந்ததும் மற்ற மூன்று திசைகளிலும் சடங்கு செய்து கொள்ளச் சொல்ல வேண்டும். முதல் சடங்கைத் தவிர அடுத்து, அடுத்து உள்ள சடங்குகள், சிலேட்டு விளக்கை இடது கையிலும், கெண்டிச் செம்பை வலது கையிலும் வைத்துச் செய்து கொண்டால் போதும். எல்லாச் சடங்கிலும் பெண் கையில் 2 வெற்றிலை இருக்கவேண்டும். நான்கு திசையிலும் சடங்கு செய்து வந்தால் ஒரு சுற்று முடிந்துவிடும். இரண்டாவது சுற்றை சும்மா வரவேண்டும். மூன்று சுற்றுக்கும் இரண்டு மாமக்காரர்களும் உடன் நிற்கவேண்டும்.



மூன்றாவது சுற்று வரும்போது, ஒன்றன் பின் ஒன்றாக மணமக்கள் இருவரும் இணைந்து நின்று தவலைகளுக்குள் கையைவிட்டுப் பார்த்து, குலம் வாழும் பிள்ளையை மாப்பிள்ளை எடுத்துப் பெண்ணின் கையில் கொடுத்து விட்டு, எழுத்தாணியைத் தன் கையில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் குலம் வாழும் பிள்ளையைப் பெண் பத்திரமாக இடுப்பில் சொருகிக் கொண்டு நடு வீட்டில் போய் இருவரும் உட்கார்ந்து வெளியே வரவேண்டும்.

### மாப்பிள்ளை பெண் பால், பழம் சாப்பிடுவது:

பெண் அழைத்து முடிந்தவுடன், வளவில் உள்ள மற்றவர்கள் பால் பழம் தருவார்கள். அத்துடன் பாக்கு பணம் ரூ.1 அல்லது 2 வைப்பார்கள். அதை முதலில் மாப்பிள்ளை சாப்பிட்டு விட்டுப் பணத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் பெண் எடுத்துக் கொள்ள வேண்டும்.

### பெண் வீட்டார் எடுக்கும் பச்சரிசி வேவு :

மாப்பிள்ளை பெண், பால், பழம் சாப்பிட்டதும் மாப்பிள்ளை வீட்டில், பெண் வீட்டார் எடுக்கவேண்டிய வேவு இது. வேவுக் கடகத்தில் பச்சரிசி பெரியபடி 1, தேங்காய் 2, கத்திரிக்காய் 2, போட்டு இருக்கவேண்டும். பெண் வீட்டைச் சேர்ந்த ஆண்கள் தலையில் இந்த வேவை வைத்து, மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த பெண்கள் இறக்குதல் வேண்டும். குறிப்பாக பெண்ணின் தகப்பனார் தலையில் இருந்து பெண் வேவு இறக்கவேண்டும்.

### மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் நெல் வேவு:

வேவுக் கடகத்தில் நெல் பெரியபடி 1, தேங்காய் 2, கத்திரிக்காய் 2 வைத்து மாப்பிள்ளையின் தகப்பனார் தலைப்பாகை கட்டி நெல் கடகத்தைத் தலையில் வைத்திருக்கவேண்டும். இந்த வேவைப் பெண் வந்து இறக்குதல் வேண்டும்.

### ஸ்ரீ தன உண்டியல் :

ஸ்ரீ தனம், தலைச் சீலையில் முடிந்தது, பாக்குச் சுருளில் வைத்தது, ஈடு பொன் தந்தது ஆகிய நான்கு தொகைகளையும் குறிப்பிட்டு உண்டியல் எழுதி உடனே செல் வைத்து அந்த உண்டியலையும் அதற்குண்டான ரொக்கம் அல்லது டிராப்டையும் ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம் பழம், புஷ்பம் வைத்து மணமக்களின் தந்தையார், பெரியவர்கள், மாமக்காரர் முதலியவர்களிடம் மாப்பிள்ளை கொடுத்து வணங்கிப் பெற்றுக் கொண்டு, முடிவில் ஒரு சிறு பையனும் மாப்பிள்ளையுமாகச் சேர்ந்து அத்தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் கொண்டு போய் வைத்து எடுத்து வரவேண்டும்.

பின்னர் பெண் வீட்டார் பாக்கு வெற்றிலை வாங்கி சொல்லிக் கொண்டு புறப்பட வேண்டியது.

### சீர்முறைக் கணக்கு பார்த்து கொள்ளுதல் :

நாளது தேதியில் திருமணத்தின் போது சீதனமாகக் கொடுத்தது ரூ. தலைச் சீலையில் முடிந்தது ரூ. ஈடுபொன் வாங்கியது ரூ. (குறிப்பு: ஈடு பொன்தொகை மாப்பிள்ளை வீட்டார் கொடுத்து ஸ்ரீதனத்துடன் அதை சேர்த்துக் கொள்ளவேண்டும் இக்காலத்தில் உண்டியல் எழுதி செல் வைக்காமல் மேலே கண்டுள்ளபடி எழுதிக்கொள்கின்றனர்.)

### நீர்ச்சோறு இடுவது:

திருமணம் முடிந்த அன்று இரவோ அல்லது மறு நாளிலோ, பெண் வீட்டார், மாப்பிள்ளை பெண்ணைக் கூட்டிக் கொண்டு சென்று மாப்பிள்ளைக்கு கஞ்சி, பணியாரம், வள்ளிக்கிழங்கு பொரித்து உள் வீட்டில் இலை போட்டு பெண் பரிமாறி தயிர் ஊற்ற வேண்டியது. அப்போதே நடு வீட்டினுள்

பெண்ணை உட்கார வைத்துப் பெண்ணின் அத்தை, பெண்ணின் கழுத்தில் தும்பைக் கட்டி விட வேண்டியது. அத்தை அல்லது அத்தை மகள் அல்லது அப்பச்சி, பெரியப்பச்சி வகையறாவும் தும்பைக் கட்டலாம்.

**மூன்று வேவு அல்லது வழிகள்:**


திருமணம் முடிந்தவுடன் மூன்று முறை பெண் வீட்டார், மாப்பிள்ளை பெண்ணைத் தன் வீட்டிற்குக் கூட்டி வரவேணும். அதில் நீர்ச் சோறு இடுவது முதல் வழியாகவும் மற்ற இரண்டு வழிகளுக்கும் ஒரே தடவையில் வந்து வரலாம். இந்த முறையுடன் திருமண முறைகள் யாவும் பூர்த்தியடைகிறது. செட்டி நாட்டுக் கல்யாணம் சீரும் சிறப்புடன் நிறைவேறுகிறது.

**காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல் :**

ஒரு குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நிறைவு பெற்றதை முன்னிட்டு இரு குடும்பத்தாரையும் பாராட்டி, அவர்களுடைய உறவினர்கள் (தாய்வழி மாமன்) கொடுக்கின்ற விருந்து இது. புது மணமக்கள் தாய்மாமன் வீடுகளுக்குச் சென்று காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல் என்பது தொன்றுதொட்டு நிலவி வருகிறது.

– நிறைவுற்றது...

படங்கள் : உ. சிறுவயல் AL.திருநாவுக்கரசு



நகரத்தார்கள் பயன் பெறும் வகையில் நகரத்தார் சமூக திருமண நடைமுறைகள் பற்றி வெளிவந்த சிறப்பு வெளியீடான நகரத்தார் திருமண நடைமுறை கையேடு புத்தகம் விலைக்கு வேண்டுவோர் கட்டுரை தொகுப்பாளர் திரு.அண .சீனிவாசன் அவர்களை 94443 44022 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் – 24

# கர்ணனின் இடக்கை தானம்

– புலவர் த.கோவேந்தன், டி.லிட்



இன்னும் எத்தனை பிறப்பெடுத்தாலும் இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்னாமல் ஈயும் வரமே வேண்டும். முத்திப் பேறும் வேண்டா என்று கண்ணனிடம் தன் உயிர் பிரியும் நிலையில் வரம் கேட்டவன் கர்ணன்.

இத்தகைய மனபாவம் படைத்தவன் ஆகையாலேயே அவன் தலையெழு வள்ளல்களில் முதன்மை பெற்றான்.

ஒரு நாள் கர்ணன் எண்ணெய் நீராட்டுக்காகத் தங்கக் கிண்ணத்தில் எண்ணெய் எடுத்துத் தன் உடலில் தடவிக் கொண்டிருந்தான்.



அப்போது ஓர் இரவலன், 'பிக்ஷாம்தேகி' (பிச்சையிடுக) என்று வந்தான்.

தங்கக் கிண்ணம் இடது கைப் பக்கமாக இருந்தது. கர்ணன் அதனைத் தன் இடக் கையாலேயே எடுத்து, இரவலனுக்கு அளித்துவிட்டான். இரவலன் மகிழ்வுடன் சென்றான்.

அருகிலிருந்த நண்பர் ஒருவர், 'கர்ணனை நோக்கி அங்கபூபதியே! இடக் கையால் தானம் தரலாகாது என்று அறநூல் கூறுகின்றதே! தாங்கள் செய்தது அறநூலுக்கு மாறுபட்டதல்லவா? வலக்கையால் தானே தந்திருக்கவேண்டும் என்றார்.

நண்பரே! அந்த அற நூலை நான் நன்கு பயின்றவன் தான். ஆனால், மனித மனம் நிலையில்லாதது. நொடிக்கு நொடி மாறிக் கொண்டே இருப்பது. இடக்கையருகே உள்ள தங்கக் கிண்ணத்தை அற நூலின்படி வலக்கையால் எடுக்கச் சில நொடிகள் தாமதமாகலாமே! அந்தச் சில நொடிளுக்குள், மனம் மாறிவிடலாமே! இவ்வளவு விலை உயர்ந்த கிண்ணத்தைத் தானமாகத் தரலாமா? என்று மனம் பகுத்தறிவைப் பேசத் தொடங்கிவிட்டால், என்ன ஆவது? என் கொடை தடுமாறிப் போகலாமே! அதனால் தான் இடக்கையால் அளித்தேன் என்றான் கர்ணன்.

கர்ணனுக்குக் கொடையில் இருந்த ஆர்வம் கண்ட நண்பர் வியப்பில் மூழ்கினார்.

# இறைவனே எல்லாம்

எல்லாப்புகழும் இறைவனுக்கே!
எல்லாப்பழியும் யாருக்கு?
எல்லா உயர்வும் இறைவனுக்கே,
எல்லா தாழ்வும் யாருக்கு?
எல்லா வாகையும் இறைவனுக்கே.
எல்லாத் தோல்வியும் யாருக்கு?
எழுந்தேன் இறைவனின் அருளால்!
விழுந்தது அதன்முன் யாரால்?
எல்லா நலனும் இறைவனால்.
எல்லாப் பிணியும் யாரால்?
எல்லா சொத்தும் பிள்ளைக்கே.
எல்லாக் கடனும்?



ஆர்.எம். சண்முகம் செட்டியார்
சண்முகநாதபுரம்

நம் நகரத்தார்

# முகர்சிங் இசை கலைஞர்

## கலைமாமணி டாக்டர். அழகு. இராமசாமி அவர்களுடன் நேர்காணல்

தாம் சார்ந்த அனைத்து துறைகளிலும் முத்திரை பதிப்பவர்கள் நம் நகரத்தார்கள். அனைத்து துறைகளிலும் நகரத்தார்கள் பங்கு அளப்பரியது. நம் நகரத்தார்களில் இசைக்கலைஞர்கள் குறைந்த என்ணிக்கையிலே உள்ளனர். அவர்களில் குறிப்பிட தக்கவரும் 45 ஆண்டுகளாக முகர்சிங் வாசித்து வரும் பன்னாட்டுப் புகழ் இசை மேதை சிறுகூடல்ப் பட்டியை சேர்ந்த கலைமாமணி டாக்டர். அழகு.இராமசாமி அவருடன் நமது நாம் நகரத்தார் மின்னிதலுக்காக ஒரு சந்திப்பு.



புதுவையில் வசித்து வரும் இவரது இசைச் சேவை உலகம் முழுவதும் பரந்து விரிந்தது. பிரபலமான பாடகர்கள் அத்தனை பேருக்கும் இவர் முகர்சிங் வாசித்திருக்கிறார். நாட்டிய நாடகம், நாட்டியம் இவற்றில் லைவ் எஃபெக்ட் என்று சொல்லக்கூடிய இயல்பு ஓசையை மேடையில் ஏற்படுத்தி அந்த நிகழ்வு எங்கு நடக்கிறதோ அங்கேகே கூட்டிச் செல்லும் அற்புதமான கலைக்கு சொந்தக்காரர். அவரது நேர்காணல் இந்த இதழில்.

**வணக்கம்.கேள்விகளுக்கு செல்லுமுன் வாசகர்களுடன் தங்களைப் பற்றி அறிமுகம் செய்து கொள்ளுங்கள் அண்ணன்..**

நாம் நகரத்தார் வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம் . எனது ஊர் சிறுகூடற்பட்டி.மாத்தூர் அரும்பாக்கூர் பிரிவை சேர்த்த நகரத்தார் .மனைவி மீனா புதுச்சேரி அகில இந்திய வானொலியின் அறிவிப்பாளர். கீழச்சிவல்பட்டியை சேர்ந்தவர் . மகள் சாய்பிரியா. மாப்பிள்ளை ராகுல் குமார் .திருமணம் ஆகி ஒரு வருடம் ஆகிறது .ஹைதராபாத்தில் இருக்கிறார்கள். எனக்கு 62 வயது ஆகிறது . 45





வருடம் இசைத்துறை அனுபவம் முகர்சிங் இசைக்கருவியில் முனைவர் பட்டம் பெற்றுள்ளேன் . நான் இப்போது இருப்பது புதுச்சேரியில்.நகரத்தார்கள் வணிகம் , நிதியியல் , மேலாண்மை , மொழி பல்வேறு துறைகளில் திறம்பட தடம் பதித்தவர்கள்..

**இசை ஆர்வம் தங்களுக்கு எப்படி ஏற்பட்டது . முகர்சிங் கலைஞராக வேண்டும் என்ற உங்கள் ஆர்வத்தைத் தூண்டியது எது?**

கவியரசர் பிறந்த மண்ணைச்சார்ந்தவன் என்ற முறையில் இசைக்கலைஞன் ஆக வேண்டும் என்று இறைவன் நினைத்து

இருக்கலாம் .முகர்சிங் இசைக்கருவி ஓர் அபூர்வமான இசைகருவி அதனால் ஆர்வம் ஏற்பட்டது.

**முகர்சிங் இசைக்கருவி பற்றி கூறுங்கள் அண்ணன் ..**

முகர்சிங் என்ற இந்த இசைக்கருவி சுமார்



3000ஆண்டுகளுக்கு முன்பே நமது நாட்டின் வடகிழக்கு பகுதியில் கிராமியக்கலைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பிறகு கர்நாடக இசை உலகில் பவனி வர ஆரம்பித்து தற்போது உலகமெங்கும் மிகவும் பிரபலமாக உள்ளது .ஒவ்வொரு நாடுகளிலும் ஒவ்வொரு பெயரைக்கொணடுள்ள இந்த இசைக்கருவிக்கு பெருமதிப்பிற்குரிய கலைமாமணி முனைவர் அரிமளம் பத்மநாபன் ஐயா

அவர்கள் மிகுந்த ஆய்வு செய்து இந்த இசைக்கருவிக்கு ‘நாமுழவு‘என்ற தமிழ்ப்பெயர்ச்சூட்டி பெருமைபடுத்தி இருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஐயா அவர்களுக்கு அனைத்து முகர்சிங் இசைக்கலைஞர்கள் சார்பாக எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்

**முகர்சிங் கலையை கற்றலில் உங்கள் பயணத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?உங்களின் திறமைகளை மேம்படுத்தியது எவ்வாறு ?உங்களின் குரு யார் ?**

எனது குரு மதிப்பிற்குரிய கலைமாமணி ஸ்ரீரங்கம் கண்ணன் ஐயா அவர்கள் சென்னையில் இருக்கிறார்கள். ஆச்சார்யாமான ஐயங்கார் குடும்பம் நாம் நகரத்தார் என்ற ஒரே காரணத்திற்காக எம்மை சிஷ்யனாக ஏற்றுக்கொணடு இந்த கலையைக் கற்றுக் கொடுத்தார்கள். வாராவாரம் புதுச்சேரியில் இருந்து சென்னை சென்று கற்றுக்கொண்டேன்.

**முகர்சிங் கலையை கற்றுக் கொள்ளும்போது மற்றும் நிகழ்ச்சிகளை கலந்து கொள்ளும் போது நீங்கள் என்ன சவால்களை எதிர்கொண்டீர்கள், அவற்றை எவ்வாறு சமாளித்தீர்கள்?**


நிறைய சவால்களை சந்தித்து இருக்கிறேன். சமாளிப்பு திறனோடு , நமது திறமையை நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும் .தேர்ந்தெடுத்த கலையை மன உறுதியுடன் கற்றுக்கொள்ள வேண்டும்.

**தங்களது முகர்சிங் வாசித்த நிகழ்வுகளில் நீங்கள் அனுபவித்த மறக்கமுடியாத தருணங்கள் அல்லது அனுபவங்களைப் பற்றி கூற முடியுமா?**



மறக்கமுடியாத அனுபவங்கள் நிறைய உண்டு. குறிப்பாக 2022ஆம் ஆண்டு நமது சகா குடியரசு நாட்டில் நடைபெற்ற உலக அளவிலான மோர்சிங் இசை நிகழ்ச்சியில் நமது நாட்டிற்காக பங்கு பெற்றது மறக்கமுடியாத நிகழ்வு.

**நவீன இசை யுகத்தில் இசை மற்றும் கலை வெளிப்பாட்டிற்கு முகர்சிங் எவ்வாறு பங்களிக்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்கள்? பயிற்சி அல்லது நிகழ்ச்சிகளில் தொழில்நுட்பம் அல்லது புதுமைகளை எந்த வழிகளில் இணைத்துக்கொள்கிறீர்கள்?**



இன்று உலகம் எங்கும் இந்த இசைக்கருவிக்கு நல்ல வரவேற்பு உள்ளது. நிறைய வெளிநாட்டு மாணவர்கள் இதை ஆர்வமுடன் கற்று வருகின்றனர். எவ்வளவு நவீன இசைக்கருவிகள் வந்தாலும் இதன் மதிப்பு என்றும் குறைவதில்லை .முன்பு இல்லாத அளவு இப்போது அனைத்து நிகழ்ச்சிகளிலும் இந்த இசைக்கருவியை பயன்படுத்த தொடங்கி இருக்கின்றனர்.

**தங்கள் நிகழ்ச்சிகளை மிகவும் ஈர்க்கக்கூடியதாக அல்லது தாக்கத்தை ஏற்படுத்த கூடியதாக அமைய நீங்கள் பயன்படுத்தும் குறிப்பிட்ட நுட்பங்கள் அல்லது தனிப்பட்ட அணுகுமுறைகள் உள்ளதா?**



நல்ல கேள்வி குறிப்பாக நாட்டிய நிகழ்ச்சிகளில் live effect instruments என்று சொல்லக்கூடிய நேரலை சிறப்பு இசைக் கருவிகள் இசைக்கும் இந்தியாவின் ஒரே கலைஞர் அடியேன் என்பதில் மகிழ்ச்சி. அது நமது நகரத்தார் சமூகத்திற்கு கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன் .உலகமெங்கும் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது

## நீங்கள் பெற்ற விருதுகள் , உடன் பங்கு பெற்ற பிரபலங்கள் பற்றி குறை முடியுமா ?

புதுச்சேரி அரசின் உயரிய விருதான கலைமாமணி உட்பட இசை வழி உலக அமைதிக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இணையத்தின் வாயிலாக நடத்தி சுமார் 35 நாடுகளின் தலைவர்கள் பாராட்டுகளை வழங்கிசிறப்பு செய்து இருக்கிறார்கள். சகா குடியரசு நாட்டில் நடைபெற்ற உலக அளவிலான முகர்சிங் இசைவிழாவில் இந்தியா சார்பாக நான் பங்கு பெற்று பாராட்டுக்களை பெற்று வந்தேன். பத்மஸ்ரீ திரு. தனஞ்செயன்,




பத்மஸ்ரீ திரு. டிவிஜி அவர்கள், ஸ்ரீ வாசுதேவன் நாயர், ஸ்ரீ இந்திராராஜன் அம்மா, பத்மஸ்ரீ நர்த்தகி நடராஜ், கலாமண்டலம் ஷேமாவதி, பேராசிரியர் ஜனார்த்தனன், டாக்டர் சுனந்தா நாயர், பேராசிரியர் சுனில் கோத்தாரி, பேராசிரியர் டாக்டர் சிவலோகனாதன் உள்ளிட்ட இசை அறிஞர்கள் பாராட்டி ஆசிகள் வழங்கி சிறப்பு செய்து இருக்கிறார்கள்.

புதுச்சேரியில் உள்ள அனைத்து இசைக் கலைஞர்களுக்கும், சென்னையில் குறிப்பாக குருச்சரண், மீரா சிவராமகிருஷ்ணன், உள்ளிட்ட பலருக்கும் வாசித்து இருக்கிறேன். குறிப்பாக நான் நாட்டியத்திற்கு அதிகம் வாசித்து வருகிறேன்.

தற்போது பத்மஸ்ரீ நர்த்தகி நடராஜ் அவர்களுக்கு தொடர்ந்து வாசித்து வருகிறேன். தியாக ப்ரும்மம் விழாவில் தொடர்ந்து வாசித்து வருகிறேன்.

**நகரத்தாரிடையே இசை மற்றும் இசை ஆர்வத்தை வளர்க்க என்ன செய்ய வேண்டும். தங்களால் எந்த விதத்தில் பங்களிப்பு செய்ய இயலும் ?**

நமது நகரத்தார் பிள்ளைகள் இசை பயில முன்வர வேண்டும் அதற்கு பெற்றோர்களும் ஒத்துழைப்பு வழங்கினால் ஏராளமான இசைக்கலைஞர்கள் நமது சமூகத்தில் வர வாய்ப்பு உண்டு. நான் எனது கருவியை சொல்லிக்கொடுக்க எப்போதும் தயாராக இருக்கிறேன்.

**கடைசியாக, வளரும் முகர்சிங் கலைஞர்களுக்கு தங்கள் ஆலோசனை ?**

வளரும் கலைஞர்கள் குருவின் ஆசிகளோடு நன்றாக பயிற்சி செய்யுங்கள். வாய்ப்புகளும் அதற்குரிய அங்கீகாரமும் உங்கள் இல்லம் தேடி வரும்.



நாம் நகரத்தார் மின்னிதழில் எமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன். இதழ் ஆசிரியர் அவர்களுக்கும் அனைத்து தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் வாழ்த்துகளையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு உடன் பிறந்தவர்கள் அறுவர் .ஐந்து சகோதரிகள். ஒரு மூத்த சகோதரர் அனைவரும் எனக்கு பக்க பலமாக இருந்து தாம்



பெற்ற பிள்ளை போல் என்னைப்பார்த்து வருகின்றனர். அவர்கள் அனைவரையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன். மேலும் எனக்கு என்றும் உறுதுணையாக நின்று நிகழ்ச்சிகள் வழங்கி வரும் இசை நாட்டியக்கலைஞர்கள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**நமது நாம் நகரத்தார் மின்னிதழுக்காக தங்கள் இசைத்துறை அனுபவங்களை பகிர்ந்து கொண்டமைக்கு இதழின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு தாங்கள் மேலும் பல சாதனைகள் புரிய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.**

**நேர்காணல் : இராம.சொக்கலிங்கம். நற்சாந்துப்பட்டி**



# ராமன் எத்தனை ராமனடி

தசரதன் மகனாய் பூமியில் பிறந்தார்
அவதாரம் என்றே போற்றிட வைத்தார்
கோசலை வயிற்றில் கருவென ஆனார்
திருமால் இராமனாய் சிறப்புகள் கொண்டார்.

வளர்த்திட்ட விதமும் அற்புதத் தன்மையே
அரக்கர்களை அழித்தார் என்றும் உண்மையே
சீதைக்குக் கணவனாய் வில்லை வளைத்தார்
சனகனின் மகளை மனைவியாய்க் கொண்டார்.

தந்தையின் சொல்படி காடாளச் சென்றார்
நாடாளும் ஆசையை நெஞ்சில் துறந்தார்
பாதச் சுவடிகள் நாட்டை ஆண்டது
அதுவும் அவதாரம் உலகம் அறிந்தது.

அசோக வனத்தில் சீதையை மீட்டார்
இராவணனை அழித்து வையத்தைக் காத்தார்
எத்தனை அவதாரம் இராமரின் வாழ்வில்
இறையின் வடிவம் புரிந்திடும் முடிவில்.



கவிச்சுடர் தஞ்சை
பழ வள்ளியப்பன்
மதுரை




# நார்த்தங்காய் இனிப்பு பச்சடி

அறுசுவையும் உணவில் சேர்த்துக் கொண்டால் தான் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடியும் என்பதால் தான் அன்றைய காலத்தில் மதிய நேரத்தில் அறுசுவைகளும் கலந்தாற்போல் சாப்பிட்டு வந்தார்கள். ஆனால் இன்றைய காலத்திலோ பலருக்கும் பல சுவைகள் அறியாமலேயே போய்விட்டது. அப்படிப்பட்ட சுவைகள் சேர்ந்த பொருளாக தான் நார்த்தங்காய் திகழ்கிறது. இந்த நார்த்தங்காய் எலுமிச்சம் பழத்தின் வகையை சார்ந்ததாக திகழ்கிறது. நார்த்தங்காயை பொருத்தவரை பலரும் ஊறுகாய் செய்து சாப்பிடுவார்கள். இதனுடைய சுவை சற்று வித்தியாசமாக இருக்கும் என்பதால் யாரும் அந்த அளவிற்கு இதை விரும்பி சாப்பிட மாட்டார்கள். அப்படிப்பட்ட நார்த்தங்காயை இனிப்பாக எப்படி பச்சடி செய்வது என்று தான் இந்த சமையல் குறிப்பு குறித்த பகுதியில் பார்க்கப் போகிறோம்.

நார்த்தங்காயில் அதிக அளவு விட்டமின்கள், சிட்ரிக் ஆசிட், கொழுப்பு அமிலங்கள் உள்ளன. இதனால் மலச்சிக்கல் மற்றும் சிறுநீரக கற்கள் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்கிறது. மேலும் வயிற்றில் உள்ள புண்களை ஆற்றுவதற்கு நார்த்தங்காய் உதவுகிறது. ரத்தம் சுத்தம் அடையும். வாதம், வயிற்றுப்புண், வயிற்றுப்புழு போன்றவற்றை நீக்கும். பசியை தூண்டும். உடல் சூட்டை தணிக்கும். பித்தத்தால் ஏற்படக்கூடிய நோய்கள் நீங்கும். உடல் வலுப்பெறும்.

தேவையான பொருட்கள் :

- நார்த்தங்காய் 4
- மிளகாய்த்தூள் 4 டேபிள் ஸ்பூன்
- வெல்லம் 4 டேபிள் ஸ்பூன்
- புளி ஒரு எலுமிச்சை அளவு
- நல்லெண்ணெய் 4 டேபிள் ஸ்பூன்
- கடுகு 1ஸ்பூன்
- வெந்தயம் 1/2 ஸ்பூன்
- பெருங்காயத்தூள் 1/2 ஸ்பூன்
- மஞ்சள்தூள் 1ஸ்பூன்
- உப்பு தேவையான அளவு

செய்முறை முதலில் பழுத்த நார்த்தங்காயாக பார்த்து தண்ணீர் ஊற்றி கழுவி பொடி பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். பொடியாக நறுக்கிய இந்த நார்த்தங்காயை குக்கரில் சேர்த்து அதனுடன் மஞ்சள் தூள் மற்றும் தேவையான அளவு உப்பையும் சேர்த்து நன்றாக வேக விட வேண்டும்.

குலைய வெந்த பிறகு அடுப்பில் ஒரு அடி கனமான பாத்திரத்தை வைத்து அதில் எண்ணெயை ஊற்ற வேண்டும். எண்ணெய் காய்ந்ததும் கடுகு, வெந்தயம் இவற்றை சேர்க்க வேண்டும். கடுகு பொறிந்ததும் வேக வைத்திருக்கும் நார்த்தங்காயை அதில் சேர்த்து நன்றாக வதக்க வேண்டும்.

பிறகு இதனுடன் கரைத்து வைத்திருக்கும் புளி, மிளகாய் தூள், வெல்லம், பெருங்காயத்தூள் இவற்றை சேர்த்து எண்ணெய் பிரியும் வரை மூடி வைத்து வேக வைக்க வேண்டும். அவ்வப்பொழுது மூடியை திறந்து



கிண்டி விட வேண்டும். இல்லையெனில் அடி பிடித்து விடும். தண்ணீர் அனைத்தும் வற்றி எண்ணெய் பிரிந்து வந்த பிறகு அடுப்பில் இருந்து இறக்கி விடலாம்.

மிகவும் எளிமையான முறையில் செய்யக்கூடிய இந்த நார்த்தங்காய் பச்சடி நாகர்கோவில் பகுதியில் மிகவும் பிரபலமாக திகழக்கூடிய ஒரு உணவு பொருளாகும். மதிய வேளையில் இந்த நார்த்தங்காயை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் வெயிலினால் ஏற்படக்கூடிய வெப்பத்தின் தாக்குதல் குறையும் என்று கூறப்படுகிறது.

மிகவும் எளிமையான முறையில் ஆரோக்கியமான நார்த்தங்காயை அனைவரும் விரும்பி சாப்பிடும் வகையில் இந்த முறையில் செய்து தந்து முழுமையான பலனை பெறுவோம்.







உமாராணி சொக்கலிங்கம்
நற்சாந்துப்பட்டி – ஈரோடு

இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். ஆச்சிகள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும்
அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை
இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas, USA

## கொண்டாடும் எலியும் கோவக்காரப் பூனையும்



தொட்டுப் பார்த்தேன் பட்டுப் பூனை
… தூரம் ஓடுது
தொடர்ந்து பார்த்தேன் அடுப்படி தேடித்
… தாவி ஓடுது
எட்டிப் பார்த்தேன் சுட்டிப் பூனை
… என்ன தேடுது?
குட்டி எலியின் சேட்டை பார்த்துக்
… கோபம் கொள்ளுது!

## இளமைத்தமிழ்

அனுதினம் எழுதிப் பழகுதற்கு
… அழகிய பன்னிரண்டு உயிரெழுத்தாம்
படித்திடப் பதியும் மனத்தினிலே
… பதினெட்டும் புள்ளிவைத்த மெய்யெழுத்தாம்
இரண்டையும் பெருக்கிப் பார்க்கையிலே
… இருநூற்றிப் பதினாறு உயிர்மெய்யாம்
இதுதான் இளமைத் தமிழென்று
… என்றும் உலகம் போற்றிடுமாம்!



# ஆரோக்கியத்திற்கு அருமையான டிப்ஸ்கள் ..!!





- மனநலக் கோளாறு மற்றும் மூளை நரம்புகளில் பாதிப்பு உள்ளவர்களின் தினசரி உணவில் தர்பூசணி துண்டுகள் அவசியம். மன அழுத்தம், பயம் போன்ற பாதிப்புகளை தகர்க்கும் விட்டமின் பி-6 தர்பூசணியில் அதிகம்.
- ஆப்பிள் தோலில் பெக்டின் என்ற வேதிப்பொருள் கணிசமாக இருப்பதால், தோலோடு சாப்பிட வேண்டும். பெக்டின் நம் உடலின் நச்சுக்களை நீக்குவதில் எக்ஸ்பர்ட்.
- பூண்டு சாப்பிட்டீர்களென்றால்& உங்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாக அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற்பத்தியாவதோடு, கேன்சர் செல்கள் உருவாகாமலும் தடுக்கும்.
- சிவப்பணு உற்பத்திக்கு புடலங்காய், பீட்ரூட், முருங்கைக்கீரை, அவரை, பச்சைநிறக் காய்கள், உளுந்து, துவரை, கம்பு, சோளம், கேழ்வரகு, பசலைக்கீரை போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

- பச்சைப் பயறு, மோர், உளுந்துவடை, பனங்கற்கண்டு, வெங்காயம், சுரைக்காய், நெல்லிக்காய், வெந்தயக்கீரை, மாதுளம் பழம், நாவற்பழம், கோவைக்காய், இளநீர் போன்றவை உடலின் அதிகப்படியான சூட்டைத் தணிக்கும்.
- சுண்டைக்காயை உணவில் சேர்த்தால்& நாக்குப்பூச்சித் தொல்லை, வயிற்றுப்பூச்சித் தொல்லை தூர ஓடிவிடும்.

  வெங்காயம், பூண்டு, சிறுகீரை, வேப்பிலை, மிளகு, மஞ்சள், சீரகம், கருப்பட்டி, வெல்லம், சுண்டைக்காய் வற்றல், செவ்விளநீர், அரைக்கீரை, எலுமிச்சை போன்றவை உடலில் உள்ள நச்சுத்தன்மை நீக்கும் உணவுகள்.
- பொன்னாங்கண்ணிக் கீரையைத் துவட்டல் செய்து சாப்பிட்டு வந்தால், மூல நோய் தணியும். இந்தக் கீரையின் தைலத்தை தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால்& கண் நோய்கள் நெருங்காது.
- சமையலுக்குக் கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்துவது மிக மிக நல்லது. கைக்குத்தல் அரிசியில் நார்ச் சத்துக்கள் நிறைந்துள்ளன.
- சைக்கிள் கேப்பில் எல்லாம் ஸ்நாக்ஸ் சாப்பிடுவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக தானியங்கள், முளைகட்டிய பயறு போன்றவற்றைச் சாப்பிடலாம்.
- பப்பாளிப் பழங்கள் மிகவும் சத்து மிகுந்தவை. வாரம் ஒருமுறை பப்பாளிப் பழம் வாங்கிச் சாப்பிடுங்கள். கண்களுக்கும் நல்லது.
- அதிக நாட்கள் உணவை ஃப்ரிட்ஜில் வைத்து சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி வைக்கப்பட்ட உணவுகளில் சத்துக்கள் குறைந்து விடுவதோடு, உடல் ஆரோக்கியத்துக்கும் தீங்கினை ஏற்படுத்தும்.
- தினசரி சிறு துண்டு பைனாப்பிளை தேனில் ஊற வைத்து, அந்தத் தேனை இரண்டு வாரம் சாப்பிட்டால் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும்.





- பலமான விருந்து காரணமாக ஜீரணக் கோளாறா? புதினா, தேன், எலுமிச்சைச் சாறு& இவற்றில் ஒவ்வொரு ஸ்பூன் கலந்து சாப்பிட்டால் போதும். கல்லும் கரைந்துவிடும்.
- கேன்சர் செல்களைத் தகர்க்கும் சக்தி திராட்சையின் தோலில் இருக்கிறது. திராட்சை கொட்டைகளிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்கள், வைரஸ் எதிர்ப்புச் சக்தியை பெரிதும் தூண்டுகின்றன.மருந்தே வேண்டாம்.

(பொறுப்பு துறப்பு: அன்புள்ள வாசகரே, இந்தக் கட்டுரை உங்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இதை எழுதுவதில் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களின் உதவியை நாங்கள் பெற்றுள்ளோம். இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். நாம் நகரத்தார் மின்னிதழ் இந்த தகவல்களை உறுதிப்படுத்தவில்லை.)

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு



சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு
நமது சிறுவாபுரி நகர விடுதியில் மாசி மாத கிருத்திகை 16/02/2024 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு வேலுக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

பக்தர்கள் திரளாக கலந்த இந்த நிகழ்வில் காலை மற்றும் மதியம் அன்னதானம் உபயதாரர்கள்
தேவகோட்டை திரு.மீ.கண்ணன் செட்டியார் குடும்பத்தினர் ,தேவகோட்டை திரு.RM.விஸ்வநாதன் செட்டியார் குடும்பத்தினர் மற்றும் பள்ளத்தூர். திரு.M.அருணாச்சலம் செட்டியார் குடும்பத்தினர் சார்பில் நடைபெற்றது.

வழிபாடு ஏற்பாடுகளை நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் குழுவினர் செய்திருந்தனர்.

நகரத்தார் பெருமக்கள் சிறுவாபுரி மாத கிருத்திகை வழிபாட்டு அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ள
பின்வரும் நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் அமைப்பின் அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளலாம் .

திரு.SP சிதம்பரம் புரவலர் (9444274720)
திரு.K.சிதம்பரம் தலைவர் (9080264411)
திரு.PR.மீனாட்சிசுந்தரம் செயலாளர் (9444183688)
திரு.முத்தையா சம்பத் பொருளாளர் (9710066980)

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

க .ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) நகரத்தார்கேப்பிட்டல் சென்னை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும் , ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட பங்கின் பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம் .

இந்த இதழில் ஒரு நிறுவனத்தைபற்றிய விரிவான பகுத்தாய்வு.

**LINCOLN PHARMACEUTICALS LTD.,**

LINCOLN PHARMACEUTICALS LTD. HEALTHCARE FOR ALL

## இந்நிறுவனத்தைப் பற்றி:

லிங்கன் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது, லிங்கனின் உற்பத்தி வசதி சர்வதேச தரத்திற்கு இனணயாக உள்ளது. ஒரு உற்பத்தி ஆய்வகம் ஸ்கேன் செய்ய வேண்டிய உலகளாவிய தரநிலைகள் மற்றும் விதிமுறைகள் உள்ளன மற்றும் அவற்றின் செயல்முறைகள் **WHO-CGMP** விதிமுறைகளுக்கு உட்பட்டு இணங்குவதை நிறுவனம் உறுதி செய்கிறது. அவர்களின் ஆய்வகத்திற்கு **ISO** 9001:2015 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன; உயர் தரம் மற்றும்

பாதுகாப்பின் திசையில் லிங்கனின் அர்ப்பணிப்பை முழுமையாக எடுத்துக்காட்டுகிறது. இந்த சான்றிதழ்கள் மற்றும் சாதனைகள் அவர்களின் முயற்சிக்கு புதிய இறகு சேர்த்துள்ளது. இந்த சாதனைகள் மூலம், நிறுவனம் மேலும் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து சந்தைகளில் திறன்களை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. கத்ராஜில் உள்ள உற்பத்தி நிலையமானது பீட்டாலாக்டம் அல்லாத மாத்திரைகள், காப்ஸ்யூல்கள், களிம்புகள்/கிரீம்கள், உலர்-தூள் சஸ்பென்ஷன்கள், மலட்டு கண் சிகிச்சை களிம்புகள், **SVP** ஊசி மருந்துகள், வாய்வழி திரவங்கள், உலர்-பொடி ஊசிகள், கண்/காது சொட்டுகள் போன்றவற்றை மட்டுமே உற்பத்தி செய்கிறது. 1979 முதல் 1982 வரை கடன் உரிமத்தின் அடிப்படையில் அதன் தயாரிப்புகளை உற்பத்தி செய்து வணிகம் செய்தது. அதன் பிறகு குஜராத்தில் உள்ள நரோடாவில் மாத்திரைகள், காப்ஸ்யூல்கள், திரவ மற்றும் தூள் சிரப்கள் மற்றும் களிம்புகள் தயாரிப்பதற்காக அதன் சொந்த உற்பத்தி வசதிகளை அமைத்தது.

சிறிய அளவிலான பெற்றோர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக மற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து கடன் உரிமத்தின் அடிப்படையில் அதன் தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது. நிறுவனம், குஜராத்தில் உள்ள கத்ராஜ் (மெஹ்சானா மாவட்டம்) என்ற இடத்தில், உலர் தூள் ஊசி, திரவ குப்பிகள், திரவ ஆம்பூல்கள் மற்றும் கண் சொட்டுகள் போன்ற சிறிய அளவிலான பேரன்டெரல்களை உற்பத்தி செய்வதற்கும், தற்போதுள்ள தயாரிப்புகளின் உற்பத்தி திறனை விரிவுபடுத்துவதற்கும் நவீன ஃபார்முலேஷன் உற்பத்தி ஆலையை அமைத்துள்ளது. சிறந்த தரக் கட்டுப்பாடு மற்றும் **R&D** க்காக அதன் தயாரிப்புகளை உள்நாட்டில் சோதனை செய்வதற்கென முழு வசதியுள்ள ஆய்வகத்தை நிறுவும் பணியில் உள்ளது.

பிப்.'96ல் அதன் திட்டப் பகுதிக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் பொது வெளியீட்டை வெளியிட்டது. நிறுவனம் 2018 ஆம் ஆண்டில் 'புரோலின்ஸ்ப்ரே' என்ற அடுத்த தலைமுறை புரோஜெஸ்ட்டிரோன் தெரபியை அறிமுகப்படுத்தியது. 2021-22 ஆம் ஆண்டில், லிங்கன் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் (டிரான்ஸ்ஃபர் ஸ்கிமிட் நிறுவனம்) மூலம்

லிங்கன் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் (**Transferee Scheme Limited** ) மூலம் இணைக்கப்பட்டது. இதன் விளைவாக, டிரான்ஸ்ஃபரர் நிறுவனம் நிறுவனத்தின் துணை நிறுவனமாக இருப்பதை நிறுத்துகிறது.

நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் செஃபாலோஸ்போரின் தயாரிப்புகளை அறிமுகப்படுத்த குஜராத்தில் உள்ள மெஹ்சானாவில் ஒரு ஆலையை வாங்கியது. நிறுவனம் 15 சிகிச்சைப் பகுதிகளில் 300 க்கும் மேற்பட்ட சூத்திரங்களை உருவாக்கியுள்ளது மற்றும் தொற்று எதிர்ப்பு, சுவாச அமைப்பு, மகளிர் மருத்துவம், கார்டியோ மற்றும் சிஎன்எஸ், எதிர்ப்பு ஆகியவற்றில் வலுவான தயாரிப்பு/பிராண்ட் போர்ட்ஃபோலியோவைக் கொண்டுள்ளது. – பாக்டீரியா எதிர்ப்பு, நீரிழிவு எதிர்ப்பு, மலேரியா எதிர்ப்பு. நாடு முழுவதும் உள்ள 30,000 க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், வேதியியலாளர்களுக்கு சேவை செய்ய 600 பணியாளர்களைக் கொண்ட வலுவான மற்றும் அர்ப்பணிப்புள்ள களப் படையை நிறுவனம் கொண்டுள்ளது. நிறுவனம் 21+ **C&F** முகவர்கள் மற்றும் 50000 க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலம் பரந்த தேசிய விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ளது.

லிங்கன் பார்மாவின் மருந்துகள் அதன் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகள் மூலம் இலக்கு சந்தைப் பிரிவுகளை அடைகின்றன. நிறுவனம் ஆப்பிரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியாவை உள்ளடக்கிய 60 க்கும் மேற்பட்ட நாடுகளில் முன்னிலையில் உள்ளது மற்றும் பல நாடுகளில் அதன் இருப்பை படிப்படியாக விரிவுபடுத்துகிறது. நிறுவனம் கிழக்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளில் பல தயாரிப்புப் பதிவுகளைப் பெற்றுள்ளது. **FY**11 இன் மொத்த விற்பனையில் 11% லிருந்து 2020 நிதியாண்டில் 60% ஆக ஏற்றுமதி அதிகரித்துள்ளது அடிப்படைக் கண்ணோட்டம்: 43.57 (2023-12 இல் முடிவடையும் பன்னிரண்டு மாதங்கள்) ஒருங்கிணைந்த சிஹறீ ஐக் கொண்ட நிறுவனம் , ஹசி விகிதம் 14.06 தொழில்துறையுடன் ஒப்பிடுகையில் 60 னிலிமிளஷி ஹோல்டிங்.

சமீபத்திய தரவுகளின்படி 49.80%. மார்ச் 21 ஆம் தேதி முதல், விளம்பரதாரர்கள் தங்கள் பங்குகளை படிப்படியாக அதிகரித்தனர். மார்ச் 21 இல் ப்ரோமோட்டர் ஹோல்டிங் 37.26% ஆக இருந்தது, இது படிப்படியாக சில காலாண்டுகளில் 49.80% வரை அதிகரித்தது.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

| Trade Information | |
|---|---|
| Traded Volume (Lakhs) | 0.36 |
| Traded Value (₹ Cr.) | 2.24 |
| Total Market Cap (₹ Cr.) | 1,233.83 |
| Free Float Market Cap (₹ Cr.) | 592.24 |
| Impact cost | 0.14 |
| % of Deliverable / Traded Quantity | 37.46 % |
| Applicable Margin Rate | 18.92 |
| Face Value | 10 |

| Price Information | |
|---|---|
| 52 Week High *(26-Feb-2024)* | 755.15 |
| 52 Week Low *(05-Apr-2023)* | 351.40 |
| Upper Band | 732.50 |
| Lower Band | 488.40 |
| Price Band | 20 |

| Securities Information | |
|---|---|
| Status | Listed |
| Trading Status | Active |
| Date of Listing | 17-Dec-2015 |
| Adjusted P/E | 14.01 |
| Symbol P/E | 14.01 |
| Sectoral Index | NIFTY PHARMA |
| Basic Industry | Pharmaceuticals |

## நிறுவனத்தின் நிதி நிலை:

| QUARTERLY \| ANNUAL | DEC 2023 | SEP 2023 | JUN 2023 | MAR 2023 | DEC 2022 |
|---|---|---|---|---|---|
| Total Income | 157.47 | 164.68 | 143.31 | 116.36 | 140.12 |
| Total Income Growth (%) | ↓-4.38 | ↑14.91 | ↑23.16 | ↓-16.96 | ↓-4.24 |
| Total Expenses | 119.60 | 127.42 | 117.45 | 98.23 | 109.28 |
| Total Expenses Growth (%) | ↓-6.14 | ↑8.49 | ↑19.56 | ↓-10.11 | ↓-4.25 |
| EBIT | 37.87 | 37.26 | 25.86 | 18.13 | 30.85 |
| EBIT Growth (%) | ↑1.62 | ↑44.08 | ↑42.69 | ↓-41.24 | ↓-4.20 |
| Profit after Tax (PAT) | 28.04 | 27.65 | 19.01 | 12.56 | 21.61 |
| PAT Growth (%) | ↑1.40 | ↑45.45 | ↑51.36 | ↓-41.88 | ↓-8.86 |
| EBIT Margin (%) | 24.05 | 22.63 | 18.05 | 15.58 | 22.01 |
| Net Profit Margin (%) | 17.81 | 16.79 | 13.27 | 10.80 | 15.42 |
| Basic EPS (₹) | 14.00 | 13.81 | 9.49 | 6.27 | 10.79 |

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS | CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 587.42 | 534.36 | 459.37 | 389.39 | 365.24 |
| Total Assets Growth (%) | ↑9.93 | ↑16.32 | ↑17.97 | ↑6.61 | ↑5.19 |
| Total Liabilities | 84.95 | 101.48 | 83.67 | 75.92 | 95.54 |
| Total Liabilities Growth (%) | ↓-16.29 | ↑21.28 | ↑10.22 | ↓-20.54 | ↓-22.13 |
| Total Equity | 502.47 | 432.88 | 375.70 | 313.47 | 269.70 |
| Total Equity Growth (%) | ↑16.08 | ↑15.22 | ↑19.85 | ↑16.23 | ↑20.11 |
| Current Ratio (x) | 5.08 | 3.90 | 4.17 | 3.78 | 2.61 |
| Total Debt to Equity (x) | 0.00 | 0.00 | 0.00 | 0.01 | 0.12 |
| Contingent Liabilities | 2.68 | 2.47 | 7.31 | 2.37 | 2.78 |

INCOME (P&L) | BALANCE SHEET | **CASH FLOW** | RATIOS | CONSOLIDATED

**INSIGHTS**

**Cash from Operations vs PAT**

Operating cash flow of Rs 39.26 cr is 0.54 times compared to the reported net profit of Rs 72.9 cr. (Source: Consolidated Financials)

**Decrease in Cash from Investing**

Company has used Rs 36.64 cr for investing activities which is an YoY decrease of 53.07%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 39.26 | 76.13 | 69.27 | 75.42 | 52.84 |
| Net Cash used in Investing Activities | -36.64 | -78.08 | -64.23 | -30.88 | -18.19 |
| Net Cash flow from Financing Activities | -4.50 | -2.56 | -5.75 | -37.76 | -35.77 |
| Net Cash Flow | -1.88 | -4.50 | -0.70 | 6.77 | -1.11 |
| Closing Cash & Cash Equivalent | 5.05 | 6.93 | 11.44 | 12.23 | 5.46 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↓-27.14 | ↓-39.38 | ↓-6.48 | ↑124.14 | ↓-16.92 |
| Total Debt/ CFO (x) | 0.05 | 0.03 | 0.00 | 0.06 | 0.60 |

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | **RATIOS** | CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 14.50 | 16.02 | 16.58 | 16.42 | 18.08 |
| Return on Capital Employed (%) | 19.89 | 21.94 | 22.10 | 21.38 | 23.58 |
| Return on Assets (%) | 12.41 | 12.97 | 13.54 | 13.21 | 13.33 |
| Interest Coverage Ratio (x) | 55.01 | 72.68 | 54.60 | 34.32 | 16.56 |
| Asset Turnover Ratio (x) | 0.91 | 0.95 | 92.34 | 99.25 | 100.25 |
| Price to Earnings (x) | 9.31 | 8.98 | 7.23 | 5.20 | 8.73 |
| Price to Book (x) | 1.35 | 1.44 | 1.20 | 0.85 | 1.58 |
| EV/EBITDA (x) | 5.79 | 5.45 | 4.70 | 3.37 | 6.17 |
| EBITDA Margin (%) | 21.88 | 22.34 | 21.88 | 19.81 | 19.90 |

## மேம்பட்ட விளக்கப்படம்:

## சகநிறுவன ஒப்பீடு:

**LINCOLN PHARMA STOCK PERFORMANCE** | RATIO PERFORMANCE | CHART | TABLE

**INSIGHTS**


**Stock Returns vs Nifty Smallcap 100**

Stock gave a 3 year return of 163.26% as compared to Nifty Smallcap 100 which gave a return of 94.94%. (as of last trading session)

**Stock Returns vs Nifty Pharma**

Stock generated 163.26% return as compared to Nifty Pharma which gave investors 54.75% return over 3 year time period. (as of last trading session)

Lincoln Pharma | Solara Active Pharma | NGL Fine Chem | Kopran Ltd | Search by Stock



## RATIO PERFORMANCE


| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROCE % | ROA % | REV CAGR [3YR] | OPM | NPM | BASIC EPS | CURRENT RATIO | TOTAL DEBT/ EQUITY (X) | TOTAL DEBT/ CFO (X) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Lincoln Pharma | 14.15 | 2.46 | 14.50 | 19.89 | 12.41 | 10.15 | 20.08 | 14.28 | 36.40 | 5.08 | 0.00 | 0.05 |
| Solara Active Pharma | -4.84 | 0.99 | -1.47 | 2.51 | -0.76 | 2.78 | 3.13 | -1.54 | -6.16 | 1.08 | 0.67 | 6.41 |
| NGL Fine Chem | 36.21 | 6.24 | 9.20 | 12.48 | 7.13 | 22.13 | 10.27 | 7.37 | 33.18 | 2.79 | 0.14 | 0.86 |
| Kopran Ltd | 33.30 | 3.06 | 6.19 | 8.91 | 4.19 | 15.28 | 7.64 | 4.94 | 5.65 | 2.25 | 0.17 | 2.21 |
| Zota Healthcare | -130.49 | 16.34 | -7.18 | -2.26 | -3.65 | 13.52 | -1.90 | -4.12 | -2.29 | 2.08 | 0.00 | 0.00 |

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:



*Showing Lincoln Pharma Shareholding as on 31 Dec 2023*

| CATEGORY | 31 DEC 2023 | 30 SEP 2023 | 30 JUN 2023 | 31 MAR 2023 |
|---|---|---|---|---|
| Promoters | 49.80 | 50.53 | 48.67 | 47.00 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 3.22 | 2.59 | 1.74 | 1.27 |
| DII | 0.06 | 0.00 | 0.00 | 0.00 |
| Mutual Funds | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| Others | 46.92 | 46.88 | 49.59 | 51.73 |



*Showing Shareholding as on 31 Dec 2023*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 99,75,292 | 49.80 % | ↓-0.73 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 6,46,500 | 3.22 % | ↑0.63 |
| DII | 11,966 | 0.06 % | ↑0.06 |
| MF | 106 | 0.00 % | 0.00 |
| Others | 93,95,970 | 46.92 % | ↑0.04 |

## நிறுவனத்தின் நடவடிக்கைகள்:

LINCOLN PHARMA BOARD MEETING/AGM | LINCOLN PHARMA DIVIDENDS | OTHERS

| MEETING DATE | ANNOUNCED ON | PURPOSE | DETAILS |
|---|---|---|---|
| Feb 08, 2024 | Jan 25, 2024 | Board Meeting | Quarterly Results |
| Nov 02, 2023 | Oct 23, 2023 | Board Meeting | Quarterly Results |
| Sep 30, 2023 | Aug 28, 2023 | AGM | Rs.1.5000 per share(15%)Dividend & A.G.M. |
| Aug 10, 2023 | Jul 28, 2023 | Board Meeting | Quarterly Results |
| May 25, 2023 | May 15, 2023 | Board Meeting | Audited Results & Dividend |

LINCOLN PHARMA BOARD MEETING/AGM | LINCOLN PHARMA DIVIDENDS | OTHERS

| TYPE | DIVIDEND | DIVIDEND PER SHARE | EX-DIVIDEND DATE | ANNOUNCED ON |
|---|---|---|---|---|
| Final | 15% | 1.5 | Sep 15, 2023 | May 25, 2023 |
| Final | 15% | 1.5 | Sep 15, 2022 | May 19, 2022 |
| Final | 15% | 1.5 | Sep 16, 2021 | May 25, 2021 |
| Interim | 15% | 1.5 | Mar 05, 2020 | Feb 24, 2020 |
| Final | 15% | 1.5 | Sep 19, 2019 | May 30, 2019 |

LINCOLN PHARMA BOARD MEETING/AGM | LINCOLN PHARMA DIVIDENDS | OTHERS

| ALL TYPES | EX-DATE | RECORD DATE | ANNOUNCED ON | DETAILS |
|---|---|---|---|---|
| Splits | Mar 19, 2009 | Mar 26, 2009 | Sep 30, 2008 | Split: Old FV2.0\| New FV:10.0 |
| Splits | Feb 08, 2006 | Feb 16, 2006 | Dec 19, 2005 | Split: Old FV10.0\| New FV:2.0 |

## எமது பரிந்துரை:

நீண்ட கால அடிப்படையில் இந்நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான 600ரூபாய் மற்றும் குறையும் தருவாயில் 400ரூபாய் வரை வாங்கலாம். இலக்கு 900 ரூபாய், 1100 ரூபாய் & 1300 ரூபாய் +++

### இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள்:

**POWER OF PREMIUM RESEARCH April 2024**

1. MIDHANI Mishra Dhatu Nigam Ltd... **Entry 380 to 400. Add more till 350. Hold for 450 and 500**

2. talbros Talbros Automotive Components Ltd... **Entry 250 to 260. Add more till 200. Hold for Target 300 and 350**

3. Marathon Nextgen Realty Ltd... Entry 490 to 510. Accumulate more till 450 on the downside. Hold for Target 600 and 660

4. ELGI Equipments Ltd... Entry 580 to 600. Add more till 500 on the downside. Hold for Target 700 and 780

5. Info Edge (India) Ltd... Entry 5500 to 5600. Add more till 4500 on the downside. Hold for 6500 and 7500

6. Tata Power Company Ltd... Entry 390 to 400. On the downside accumulate till 330. Hold for Target 440 and 480

7. Steel Authority of India Ltd... entry 130 to 135. Add more till 100 on the downside. Hold for Target 160 and 180

8. E I D-Parry (India) Ltd... Entry 520 to 550. On the downside accumulate till 400. Hold for Target 660 and 800

9. Gujarat State Fertilizers & Chemicls Ltd... entry 190 to 200. On the downside accumulate till 150. Hold for Target 250 and 300

10. D P Wires Ltd... Entry 400 to 425. On the downside accumulate till 350. Hold for Target 550 and 650


11. NMDC Ltd... Entry 190 to 200. Accumulate more till 150 on the downside. Hold for Target 250 and 300

12. UPL Ltd... Entry 440 to 450. Accumulate more till 350 on the downside. Hold for Target 550 and 700

**## Note:** To get the above referred stocks in time, Kindly Subscribe our POWER OF PREMIUM RESEARCH. To Create Wealth, Kindly Subscribe WEALTH MATRIX.

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது



# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young Generation" can learn and start doing analysis, Finding potential stock, To give Correct Entry / Correct Exit to win the Trade(Short term), Invest in turn around stocks, Invest in Multi-Bagger stocks to create wealth(Long term).**


**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This Month Class will be from Friday 19 April 2024.

**Webinar Timings** India Time: in 17:30Hrs-18.30 Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs Week Ends.

**# For further Details Contact:** +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# குருபெயர்ச்சி 2024 பலன்கள் எந்த ராசிக்கு யோகம் ?



ஜோதிடர் எல்லி

நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்களுக்கு ஜோதிடர் எல்லியின் அன்பான வணக்கங்கள்.

காலமும் நேரமும் யாருக்காகவும் எப்போதும் நிற்பதில்லை! பிரபஞ்ச இயக்கம் அணுவளவும் ஓய்வெடுப்பதில்லை!.

அண்டசராசரங்களையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள நவகிரகங்கள் தத்தமது கடமைகளை இம்மி பிசகாது செய்து வருகின்றது. அதன் படி கிரகங்கள் நகர்ந்து கொண்டே இருக்கும். 12 ராசி கட்டங்களில்



27 நட்சத்திரங்கள் வழியாக இந்த நகர்வு நடக்கும்.

ஒவ்வொரு ராசியிலும் அதிலுள்ள நட்சத்திரங்களில் 9 பாதங்களில் பயணித்து சுழன்று கொண்டே செல்கிறது.மனிதர்களின் அவரவர் ஜனன ராசிக்கு இந்த பெயர்வுகள் ஜாதகத்திற்கு தகுந்தவாறு விதிப்படி பலன்கள் கொடுக்கும்.இதையே கோள் சார பலன்கள் என்கிறோம்.

அந்த வகையில் பெரும்பாலானோர் எதிர்நோக்கும் குரு பகவான் பெயர்ச்சி பற்றிய தகவல்களை இந்த கட்டுரையில் காணலாம்.

நவ கிரகங்களில் முழுமுதற் சுபர் குரு பகவான், இவர் ராசிக்கு ,2,5,7,9 ,11ல் வரும் காலங்களில் பொதுவாக நன்மைகளை செய்வார் என்பதும் ராசிக்கு 1,3,4,6,8,12 ஆகிய பாவங்களில் வரும் போது சோதனைகளையும், கஷ்டங்களையும் ஏற்படுத்தி விடுகிறார் என்பதும் பொது விதி!

இவரது பார்வை பெறும் இடங்கள் சுபிட்சம் ஆகும்!.குரு பார்வை கோடி நன்மை என்பது ஜோதிட மொழி .எனினும் ஜாதகரின் ஜனன லக்ன யோகமானது இந்த பொதுவிதியையும் மாற்றி



விடுகிறது. ஏழரை சனி பாதகாதிபதி தசா நடைபெறும் ஜாதகர்களுக்கு கோச்சார குரு பார்வை முழுமையாக நன்மை பெறாமல் போவது இதனால் தான்.

ஆயினும் ஒரு கிரகம் தன் தசா வில் முழுமையாக நன்மைகளை மட்டுமே செய்யும் என்பதும், முழுமையாக கெடுபலன்களையே செய்யும் என்பதும் கிடையாது.

எவ்வளவு அவயோக தசா வாக இருப்பினும் இடையில் சில நன்மைகளும் ஏற்பட்டு விடும்!.ஒன்றை கெடுத்து ஒன்றை கொடுப்பதும் நடைபெறும்!.ஆகவே தசா புக்தி பொறுத்து தான் குரு பெயர்ச்சி பலன்கள் அமையும் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

குரு பகவான் ராசிக்கு இரண்டாம் பாவத்திற்கு வரும் காலங்களில் திருமண தடையினை நீக்கி குடும்பம் அமைய வழிவகை செய்கிறார்.ஜாதகரின் ஜனன ஜாதகத்தில் திருமண யோகம் இருப்பின் இது நடந்தே தீரும்.ஆண் ஜாதகருக்கு சுக்கிரன் சுபவலு பெற்று ராசிக்கு இரண்டில் குரு வரும் போது திருமணம் கைகூடுகிறது.

ஜாதகருக்கு களத்திர ஸ்தானம் பாதிக்கப்பட்டு,குடும்ப ஸ்தானம் வலுவிழந்து, அயன சயன போக ஸ்தானமாகிய 12 இடத்தில் பாவிகள் குடி கொண்டு இருக்கும் நிலையில் குரு ராசிக்கு இரண்டில் சஞ்சாரம் செய்தாலும் திருமண வாழ்க்கை கிடைக்காமல் போகலாம்!.அந்த நேரத்தில் வரக் கூடிய திருமண வாய்ப்புகளை ஜாதகர் தனது எதிர்பார்ப்புகள் மூலம் கெடுத்து கொள்ளும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

கோள் சாரத்தில் இரண்டில் குரு வருகையில் பொதுவாக செல்வம், உயர் நிலை, பெரியோர்கள் ஆசி, நற்சிந்தனை இவைகள் ஜாதகருக்கு உண்டு தான்.ஆனால் அப்போது குரு வக்கிர கதி யில் இருந்து விட்டால் மேற்கண்ட விசயங்களில் குறைபாடுகள் உண்டாகி விடுகிறது.

ராசிக்கு ஏழாம் இடத்தில் குரு பகவான் பெயர்ச்சி ஆகும் பொழுதும் திருமண யோகம், மனைவியால் நன்மைகள், நண்பர்களால் ஆதாயம் பொதுவாழ்வில் சிறப்பு இவைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. அப்போது ஜாதகருக்கு பாதகாதிபதி தசா

நடைபெற்றால் முழுமையான யோகத்தினை பெறாமல் போவதும் உண்டு.

ஆகவே இங்கு குரு பெயர்ச்சி சாதகமாக அமைந்தாலும் நடப்பு தசா புத்தி அதனை மாற்றி அமைத்து விடுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

குரு ராசிக்கு நாலாம் இடத்தை பார்வை செய்யும் போது ஜாதகருக்கு சுகம் உண்டாகும், தாயாருக்கு உடல் நிலை சீராகும், வீடு வாகன வகையில் சிறப்பு உண்டு.ஆனாலும் இங்கு குரு பகவான் உடன் ராகு போன்ற பாவர் சேர்க்கை உண்டாகி விட்டாலோ ராசிக்கு நாலாம் இடத்தில் சனி பலன்கள் அமர்ந்து விட்டாலோ பலன்கள் வேறு விதமாக அமைந்து விடுகிறது. எனவே வெறுமனே குரு பகவானை மட்டும் கருத்தில் கொள்ளாமல் கோச்சாரத்தில் அவருடன் இணைந்து பயணிக்கும் கிரகங்களையும், சனி, ராகு கேது நிலையையும் அறிந்து தான் பலன்கள் உரைக்க வேண்டியிருக்கிறது.

புத்தி பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய ஐந்தாம் வீட்டிற்கு குடி பகவான் வரும் போதும், பார்வை செய்யும் போதும் ஜாதகருக்கு குழந்தை பேறு உண்டாகும்.பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறு இருந்தாலும் நீங்கி விடும்.இங்கே யும் குரு வின் நிலையை முழுமையாக உணர்ந்து தான் பலன்கள் கூற வேண்டியுள்ளது.

கோச்சார ரீதியாக வரும் குரு பகவான் சுபத்துபமாகவும்



பலமாகவும் அமரும் போது நன்மைகள் உண்டாகும் என்பதில் மாற்றம் இல்லை. எடுத்துக்காட்டாக மீன லக்னம் கன்னி ராசிக்காரர்களுக்கு கோச்சாரத்தில் கடகத்தில் குரு உச்சம் பெறும் நிலையில் கண்டிப்பாக புத்திர பாக்கியம் கிட்டும். காரணம் லக்னத்திற்கு ஐந்தில் அமர்ந்து ராசிக்கு ஐந்தை குரு பார்வை செய்வதால் யோகம் உண்டாகிறது. குரு பகவான் ராசிக்கு 12 ல் அமரும் போது சுப செலவினங்கள்,சுப பயணங்கள் ஏற்படும். நல்ல இடமாற்றம், தொழில் மாற்றங்கள் உண்டாகின்றன!

மேலும் கோச்சாரத்தில் உள்ள கிரகங்களின் சாரம் பொறுத்தும் பலன்கள் எடுக்க வேண்டியது அவசியம் ஆகும். இப்படியாகத்தான் குரு பெயர்ச்சி பலன்கள் அமையும்.

அடுத்ததாக இந்த ஆண்டு சித்திரை மாதம் 18 -ம் தேதி(1-5-2024) ஏற்பட போகும் குரு பகவான் பெயர்ச்சி 12 ராசிகளுக்கும் என்னவிதமான பலன்களை கொடுக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்

மேஷத்தில் இருந்து ரிசபத்திற்கு குரு பகவான் பெயர்ச்சி ஆகிறார். தேவ குரு வானவர் (வியாழன்)அசுர குருவான சுக்கிரன் வீட்டில் சஞ்சரிக்க போகிறார்.

**மேஷம் :**



குடும்பத்தில் அமைதி நிலவும் .வருவாய் படிப்படியாக உயர்ந்து வரும்.திருமணம் ஆகாத ஜாதகர்களுக்கு 15-5-2024 க்கு பிறகு திருமணம் நிச்சயம் ஆகும்.உடல் நிலை பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் குணமாகி இயல்பு நிலைக்கு வந்து விடுவார்கள்,வேலை வாய்ப்புகள் உண்டாகும்,தொழிலில் லாபம் உண்டு , அலைச்சல் இருக்கும், நேரத்திற்கு சாப்பிட இயலாது, தூக்கம் மற்றும் உணவு விசயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.



## ரிஷபம்

ஜென்ம குரு.அலைச்சல் அதிகரிக்கும், நினைத்ததை சரியாக செய்ய முடியாது,எனவே திட்டமிடல் வேண்டும்.பூர்வீக சொத்துக்கள் கைகூடும் வாய்ப்பு உள்ளது.கணவன் மனைவி உறவில் பிரச்சினைகள் வந்தாலும் முடிவு சுலபமாகும்.தம்பதிகள் தங்களுக்குள் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க வேண்டும்.காதல் மற்றும் திருமண விசயத்தில் நல்ல அணுகூலங்கள் உண்டு.



## மிதுனம்

சுப நிகழ்ச்சிகள் நடக்கும், கோயில் காரியங்களை ஒத்தி போட்டிருந்தால் இப்போது செய்து கொள்ளலாம். ஏற்கனவே திட்டமிட்ட ஆன்மீக பயணங்களை மேற்கொள்ளலாம் .உடல் ஆரோக்கியத்திற்கான மருத்துவ விசயங்களை செய்யலாம்



## கடகம்

அஷ்டமத்து சனி பற்றிய பயத்தை விட்டு விடுங்கள்.புதிய முயற்சிகளை துணிந்து முன்னெடுங்கள்!பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு நல்ல செய்திகள் வந்து சேரும்



## சிம்மம்

தொழிலில் எதிர்பார்த்த அளவிற்கு மாற்றங்கள் ஏற்படாமல் போகலாம்.மனக்கவலை நீங்கி விடும், நல்ல ஓய்வுக்கு சாதகமான சூழல் உண்டாகும்.குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுங்கள், நல்ல வருவாய் ஏற்படும்

## கன்னி



பாக்கிய ஸ்தானத்திற்கு குரு வருவது சிறப்பு.குழந்தை பேறு எதிர்பார்த்து காத்திருக்கும் ஜாதகர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும், சமூகத்தில் நன்மதிப்பு, கௌரவம் உண்டாகும்.எடுக்கும் முயற்சிகளில் வெற்றி உண்டாகும்.உடலும், உள்ளமும் சீராகும்!.தினசரி உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ள நேரம் கிடைக்கும், சில நல்ல முயற்சிகளுக்கு இருந்த தடைகள் விலகி விடும். முயற்சிகள் திருவினையாக்கும்.

## துலாம்



பூர்வீக சொத்து விசயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.வழக்குகளை தவிர்த்து விடுங்கள், பொறுமையை கடைபிடிக்க வேண்டிய சூழல் தற்போது உங்களுக்கு!.குழந்தை பராமரிப்பு முக்கியம்,வயிற்று பிரச்சினைகள் வராத அளவிற்கு உணவுகள் எடுக்க பழகிக்கொள்ளுங்கள்!.குழந்தை பேறு தள்ளி போகும் கவலை வேண்டாம்

## விருச்சிகம்



நினைத்த காரியங்கள் கைகூடும்!.முயற்சிகள் வெற்றி அடையும், தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்!நிலம் சார்ந்த விசயங்கள் சாதகமாக இருக்கும்.ரியல் எஸ்டேட் விற்பனை அது சார்ந்த முகவர்களுக்கு மிகப்பெரிய லாபம் கிடைக்கும்!.யூனிபார்ம் சர்வீஸில் இருப்பவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. வீடு கட்டும் நோக்கத்தை தள்ளி போடுவது நல்லது.வாகனங்களை நன்றாக பராமரித்து கொள்ள வேண்டும், வாகனத்தில் பயணிப்போர் கவனத்துடன் இருக்க வேண்டும்



## தனுசு

உடல் ஆரோக்கியத்தில் கவனம்! தேவை! வருவாய்க்கு குறைவு இல்லை .அதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்! ஜாதகர் வீட்டில் நிம்மதியாக பொழுதை கழிக்க நேரமிருக்காது .வேலை காரணமாக அலைச்சல் மிகுதியாக இருக்கும்



## மகரம்

ஏழரை சனி பாதிப்பு இருப்பதாக உணர்ந்தவர்களுக்கு இந்தாண்டு அந்த எண்ணம் இருக்காது!

சமூகத்தில் நல்ல மதிப்பு, கௌரவம் உண்டாகும்

மன அழுத்தம், மன சஞ்சலங்கள் இருப்பவர்களுக்கு அது நீங்கி மனம் புத்துணர்ச்சி உண்டாகும். லாபம் அதிகரிக்கும்




## கும்பம்

குடும்பம் உறவுகளில் சுப காரியங்கள் நிறைய உண்டாகும் அதன் மூலம் சுப செலவினங்கள் அதிகமாக இருக்கும்.வேலை தொழிலில் மாற்றத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் ஜாதகருக்கு உடனடியாக நல்ல செய்திகள் வந்துவிடும். வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு இடம் மாறுதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.பேச்சில் கவனம் தேவை



## மீனம்

அவ்வப்போது உடல் நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை யில் இருந்த ஜாதகருக்கு உடல் நிலை விரைவில் சீராகி விடும்.நேரத்திற்கு சாப்பிட, தூங்க முடியாத நிலை தொடரவே செய்யும்.பத்திரிகை,




அரசியல், ஊடக துறையில் உள்ள அன்பர்களுக்கு மிக சிறப்பான யோகங்கள் உண்டாகும். மாணவர்களுக்கு தேர்வில் எதிர்பார்த்த வெற்றி உண்டு மேற்படிப்பு க்கு அதிக முயற்சி செய்ய வேண்டி இருக்கும், முடிவு சுபமாக இருக்கும். பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு சிறப்பாக நற்பலன்கள் உண்டாகும்.

இந்த கட்டுரை வாயிலாக கோச்சார குரு வின் பலன்கள் பற்றியும் அதனை எப்படி அணுக வேண்டும் என்கிற புரிதலையும் வாசகர்கள் உணர்ந்து இருப்பீர்கள் . அது போல வரப்போகும் குருபெயர்ச்சி பற்றிய தகவல்களையும் அறிந்து கொண்டு அது பற்றிய தெளிவு பெற்று இருப்பீர்கள் என்றும் நம்புகிறேன்

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம் .

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர் . ஜோதிடம் ,தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் , ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர் . தொடர்புக்கு : 99 44 86 59 43





# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

**97917 76534**

www.naamnagarathar.com